Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 241 | செவ்வாய்க்கிழமை | ஆடி 11 ஆம் நாள் 27 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

### யாழ்ப்பாணத்தில் புதிதாக நியமிக்கப்படவுள்ள

# மாவட்டச் செயலரும் சிங்களவரா? உடனே தடுத்து நிறுத்தவும்

## மஹிந்தவுக்கு சம்பந்தன் அவசர கடிதம்

கொழும்பு, ஜூலை 27

யாழ்ப்பாண மாவட்டச்செயலராகவும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரையே நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்துவருகின்றது என்று அறியமுடிகின்றது. இந்தநிலையில், "தமிழ் பேசத்தெரியாத ஓர் அரச உத்தியோகத்தரை மாவட்டச்செயலராக யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நியமிப்பது பொருத்தமற்ற ஒரு விடயமாகும் என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அத்தகைய நியமனத்தை உடன் நிறுத்துமாறும் கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். 19



## வைரவர் சிலை மீட்பு கடத்திய இருவர் கைது

வவுனியா, ஜூலை 27

பழமை வாய்ந்த வைரவர் வடிவிலான சிலை முச்சக்கரவண்டியில் கடத்திச்செல்லப்பட்டவேளை, வவுனியாவில் நேற்று மீட்கப்பட்டது. அதனைத் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் முஸ்லிம் ஒருவரும் தமிழர் ஒருவ 19

## அரச ஊழியர்கள் அனைவரும் திங்கள் பணிக்கு திரும்பவும்?

கொழும்பு, ஜூலை 27

அடுத்தவாரம் தொடக்கம் அரச ஊழியர்கள் அனைவரையும் பணிக்கு அழைப்பது தொடர்பில் பொதுநிர்வாக அமைச்சு பரிசீலித்து வருகிறது. குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களை 19

## ஆசிரியர்களின் கோரிக்கைகள் இன்று ஆராய்வு

*பெப்ரவரியில் சா.த. பரீட்சை செப்ரெம்பரில் பாடசாலைகள்*

கொழும்பு, ஜூலை 27

ஆசிரியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் இன்றுகாலை கலந்துரையாடப்படவுள்ளது என்று 19

## 250 கிலோ கஞ்சா கடத்திய மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 27

தொண்டைமானாறு கடற்பரப்பில் படகு மூலமாக கஞ்சா போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டனர் என்று குற்றச்சாட்டில் மூவர் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். 19

## புதுக்குடியிருப்பு செயலக அலுவலருக்கு தொற்று

முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து 19

## கொரோனாவால் முல்லைத்தீவில் முதியவர் சாவு

முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு மணற்குடியிருப்பைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. செபஸ்ரியாம்பிள்ளை மேரியோகம்மா (வயது 92) என்ற அந்த முதியவர், நான்கு நாள் 19

## வவு.பேருந்து நிலைய கடைத்தொகுதியில் 25 பேருக்கு தொற்று

(விரிவு-03இல்)

## கூட்டு பயணம் தொடரும்!

*வாய்ச்சவாடல்களை தூக்கிக்கடாசிவிட்டு ஜனாதிபதியிடம் சுதந்திரக்கட்சி சத்தியம்*

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசில் தொடர்ந்தும் பங்காளியாக அங்கம் வகிப்பதற்கு தீர்மானித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இது 19

## மஹிந்தவின் யாழ்ப்பாண பயணம் ரத்து

யாழ்ப்பாணம், ஜூலை 27

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்தநிலையில், குறித்த பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது 19

### எழுமாற்று சோதனையில்

## வல்வெட்டித்துறையில் 16 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஜூலை 27

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி பகுதி தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட எழுமாறான அதிவிரைவு அன்டிஜென் பரிசோதனையில் 16 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் நேற்று 166 பேருக்கு மேற்கொள்ளப்பட 19

## கரவெட்டி தெற்கில் 49 பேருக்குத் தொற்று

*அந்தப் பகுதியை முடக்க ஆராய்வு கோவில் திருவிழாவால் தொற்றுபரவல்*

யாழ்ப்பாணம், ஜூலை 27

கரவெட்டி தெற்கில் அமைந்துள்ள முருகன் கோவில் ஒன்றில் அண்மையில் நடைபெற்ற திருவிழாவில் பங்கேற்ற பக்தர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 49 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எழுமாறாக 179 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் மேற் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ரிஷாத் விவகாரத்தில் எவரையும் காப்பாற்ற முயற்சிக்கவே கூடாது

## மஹிந்தவிடம் வீரசேகர கோரிக்கை

**கொழும்பு, ஜூலை 27**

**"நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனைக் காப்பாற்ற அரசைச் சேர்ந்த எவரும் தலையிடக் கூடாது. சிறுமியின் இறப்பு தொடர்பில் விரைவாக விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறுவர்களைப் பணிக்கு அமர்த்தும் செயற்பாடுகளை கண்காணிக்க பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும். அவ்வாறு சிறுவர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்."**



இவ்வாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் தான் கோரியுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டில் புதிய சட்டத்திருத்தங்களை முன்னெடுப்பது குறித்தும், சிறுவர் பாதுகாப்புக்கான கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்தும் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளோம். அதற்கமைய 14 வயதுக்குக் குறைந்த சிறுவர்களைப் பணிக்கு அமர்த்துவது குறித்து ஆராயவும், அவ்வாறு சிறுவர்களை வலுக்கட்டாயமாகவோ அல்லது வேறு காரணங்களைக் காட்டி பணிக்கு அமர்த்தும் நபர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமர் எனக்கு வலியுறுத்தியுள்ளார்.

இப்போதே அதற்கான வேலைத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். இது பொலிஸாரை இணைத்து அவர்கள் மூலமாக முன்னெடுக்கும் வேலைத்திட்டமாகும். அதேபோல், சட்டத்தில் திருத்தங்களை முன்னெடுத்து 18 வயதுக்குக் குறைந்த எவரும் பணிக்கு அமர்த்தப்படக் கூடாது என்ற சட்டத் திருத்தங்களை முன்னெடுக்க ஆராயுமாறும் பிரதமர், நீதி அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், ஒரு சமூகத்தின் பிரதிநிதியாக செயற்படும் நபருடைய வீட்டில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது நல்லதல்ல. இதனையே சகலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொழும்பில் உயரிய குடும்பங்களில் உள்ளவர்களை அவர்களின் பிள்ளைகளைப் பார்த்துக்கொள்ள மலையகத்தில் உள்ள சிறுவயது பிள்ளைகளைப் பணிக்கு அமர்த்தும் மாபியா ஒன்றும் செயற்பட்டு வருவதாகவே நாம் கருதுகின்றோம்.

இதனை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுப்போம். இதில் யார், எவர் என்ற பாகுபாடு இல்லாது அரசு நடவடிக்கை எடுக்கும்" என்றார்.

(து-22)

---

## உடற்கூற்றுப் பரிசோதனையில் சந்தேகமென பெற்றோர் முறையீடு

கொழும்பு, ஜூலை 27

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த நிலையில் உயிரிழந்த மலையகச் சிறுமி ஹிஷாலினியின் பெற்றோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு பதிவுசெய்துள்ளனர்.

"ஹிஷாலினியின் இறப்பு பரிசோதனை தொடர்பில் எமக்குச் சந்தேகம் நிலவுகின்றது. எனவே, மீள்பரிசோதனை நடத்தப்பட வேண்டும். அத்துடன் இறப்பு தொடர்பில் சுயாதீன விசாரணைக்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல் எனது மகளை இருட்டறைக்குள் வைத்து கொடுமைப்படுத்தியுள்ளனர். உடற்கூற்றுப் பரிசோதனை நடத்திய மருத்துவர் தொடர்பில் எமக்கு நம்பிக்கை இல்லை. எனவே, மீள் பரிசோதனை நடத்தப்பட வேண்டும் எனக் கோரினோம்" என்று ஹிஷாலினியின் பெற்றோர் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

(து-22)

---

## ஹிஷாலினி சாவு குறித்து ரிஷாத்திடமும் வாக்குமூலம்

கொழும்பு, ஜூலை 27

ஹிஷாலினியின் இறப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனிடம் வாக்குமூலம் பதிவு செய்யவுள்ளோம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரிஷாத் பதியுதீனின் கொழும்பு இல்லத்தில் பணிப் பெண்ணாக வேலை செய்தபோது, எரிகாயங்களுக்குள்ளாகிய தலவாக்கலை - டயகமவைச் சேர்ந்த 16 வயதான ஹிஷாலினி என்ற சிறுமியின் இறப்பு தொடர்பில், ரிஷாத் பதியுதீனிடம் வாக்குமூலம் பதிவுசெய்ய நடவடிக்கை எடுத்துவருகின்றோம் என்று பொரளை பொலிஸார் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தனர். பொலிஸார் இந்த விடயத்தை 'பி' அறிக்கை மூலம் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

அதேவேளை, குறித்த சிறுமியின் இறப்பு தொடர்பில் இதுவரை 36க்கும் மேற்பட்டோரிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும், ரிஷாத் பதியுதீனின் வீட்டில் உள்ளவர்கள் மற்றும் வீட்டுக்கு வந்துசெல்பவர்களும் அதில் உள்ளடங்குகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

(து-22)

---

### சிறுமியின் உடலை

## மீளத் தோண்டியெடுக்க நீதிமன்று உத்தரவு

### ரிஷாத்தின் மனைவி உட்பட 4 பேருக்கும் விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 27

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் உயிரிழந்த சிறுமியின் உடல் இறுதிக்கிரியையின் பின்னர் புதைக்கப்பட்ட நிலையில், குறித்த உடலை தோண்டியெடுத்து மீண்டும் பிரேத பரிசோதனை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய சிறுமியின் இறப்பு தொடர்பில் சந்தேகம் நிலவுகின்றது என்று பெற்றோர் கூறியிருந்த நிலையில் நீதிமன்று மேற்கண்டவாறு கூறியுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களை எதிர்வரும் ஆகஸ்ட் 9ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

ரிஷாத் பதியுதீனின் மனைவி, மாமா மற்றும் சிறுமியை அந்த வீட்டுக்கு பணியாளராக அழைத்துச் சென்ற தரகர் ஆகியோரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ரிஷாத் பதியுதீனின் வீட்டில் முன்னர் பணியாற்றிய 22 வயது யுவதி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ள ரிஷாத் பதியுதீனின் மைத்துனரையும் ஓகஸ்ட் 9ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைப்பதற்கு நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டிருந்த அவர்கள் நீதிமன்ற அனுமதியுடன் 48 மணித்தியாலங்களுக்குத் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

(து-22)

---

## பதவி விலகிய உறுப்பினர்

சாவகச்சேரி, ஜூலை 27

சாவகச்சேரி நகரசபையின் நகர் வட்டார தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரான ப.ஜெயகாந்தன், தனது உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

இந்த விடயத்தை, யாழ்ப்பாண மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், நகரசபையின் தவிசாளருக்கு அறிவித்துள்ளார்.

இந்தநிலையில் அவர் சபையில் வகித்த உப குழுக்களுக்கு வேறொருவரை நியமிக்க நகர சபையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று நககர சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

(து-9)

---

### வவுனியா மாவட்ட

## பதில் செயலாளராக திரேஸ்குமார் நியமனம்

வவுனியா, ஜூலை 27

வவுனியா மாவட்ட பதில் செயலாளராக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தி.திரேஸ்குமாரை நியமித்துள்ளது.

வவுனியா மாவட்ட செயலராக இருந்த எஸ்.எம்.சமன்பந்துலசேன வடக்கின் பிரதம செயலாளராக பதவியேற்றுள்ள நிலையில், வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள மாவட்டச்செயலர் வெற்றிடத்துக்கு திரேஸ்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அங்கு இதுவரை, மேலதிக செயலாளராகச் செயற்பட்டுவந்தார்.

கடந்த 2003 ஆம் ஆண்டு நிர்வாக சேவைக்கு தெரிவான திரேஸ்குமார் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளராக கடமையாற்றியவேளை 10.02.2016 தொடக்கம் வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச்செயலாளராக செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(து-18)

---

## கொரோனாத் தொற்றால் மேலும் 48 பேர் உயிரிழப்பு

### 1,653 பேருக்கு தொற்று

கொழும்பு, ஜூலை 27

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 48 பேர் உயிரிழந்துள்ளனர் என்று, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 48 பேரில் 30 ஆண்களும், 18 பெண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 147 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை,இலங்கையில் நேற்று ஆயிரத்து 653 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 98 ஆயிரத்து 169 ஆக எகிறியுள்ளது. கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 405 பேர் நேற்று குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து வீடு திரும்பியுள்ளனர்.

(து-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியாவில் எகிறுகின்றது தொற்று

## பழைய பஸ் நிலையத்திலும் 25 பேருக்குத் தொற்று உறுதி

வவுனியா, ஜூலை 27

வவுனியா பழைய பஸ் நிலையப்பகுதியில் பணியாற்றும் வியாபார நிலைய ஊழியர்கள் 25 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
குறித்த பகுதியில் பணியாற்றும் ஊழியர்கள் பலருக்கு நேற்றுமுன்தினம் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதன் முடிவுகள் நேற்று கிடைக்கப்பெற்றன. அதன் அடிப்படையில் அங்கு பணியாற்றும் 25 ஊழியர்களுக்கு தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்து குறித்த பகுதிக்கு நேற்றுச் சென்ற சுகாதாரப்பிரிவினர் 5க்கும் மேற்பட்ட வியாபார நிலையங்களை தனிமைப்படுத்தியுள்ளதுடன், தொற்று உறுதியானவர்களை இனம் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ப-110)

## வவுனியாவில் 14 பேருக்கு திங்களன்று தொற்று உறுதி

வவுனியா, ஜூலை 27

வவுனியா சந்தைச் சுற்றுவட்ட வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களைச் சேர்ந்த 11 பேர் உட்பட 14 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.
வவுனியா சந்தை உள்வட்ட வீதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுபவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அதில் 11 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்பைப் பேணிய மேலும் மூவருக்கும் கொவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் வவுனியாவில மேலும் 14 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.
தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ப-18)

சுகாதார விதிமுறைகளை மீறி திருவிழா

# பொலிஸாரைக் கண்டதும் தெறித்தோடினர் பக்தர்கள்

### சிக்கியோருக்கு அன்டிஜென் சோதனை
### காவடி எடுத்தவருக்கு சட்ட நடவடிக்கை

சாவகச்சேரி, ஜூலை 27

**சுகாதாரப் பிரவினரால் விடுக்கப்பட்ட நிபந்தனைகளை மீறி கோவில் திருவிழாக்களை நடத்தியவர்கள் தேர்த் திருவிழாவன்று கோவிலுக்குச் சென்ற சுகாதாரப் பிரிவினரைக் கண்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.**

சுகாதார விதிமுறைகளை மீறி முட்கள் குற்றி காவடி எடுத்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் கைதடி மத்தி பகுதியில் உள்ள கோவில் ஒன்றில் இடம்பெற்றுள்ளது.
இவ் வருட பெருந் திருவிழா தொடர்பாக கோவில் பரிபாலன சபையினர் அனுமதிகோரி சுகாதாரப் பிரிவினருக்கு விண்ணப்பித்திருந்தனர்.
சில நிபந்தனைகளுடன் திருவிழா செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் சுகாதார விதிமுறைகளை மீறி திருவிழா நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.
குறித்த ஆலயத்துக்கு தினமும் செல்லும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பலதடவைகள் சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்குமாறு அனுமதி பெற்றவர்களுக்கும் திருவிழாவில் பங்குபற்றியவர்களுக்கும் அறிவுறுத்தல்களை விடுத்தும் எச்சரிக்கை செய்தும் எவரும் செவிசாய்க்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.
இந்த நிலையில் தேர்த் திருவிழா அன்று சுகாதாரப் பிரிவினர் பொலிஸாருடன் ஆலயத்துக்குச் சென்றுள்ளனர். இதன்போது அங்கு நின்றவர்கள் தப்பியோடியுள்ளனர்.
பொலிஸாரிடம் அகப்பட்டவர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை செய்யப்பட்டது. சுகாதாரப் பிரிவினரின் விதிமுறையை மீறி முள்குத்தி காவடி எடுத்தவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப-9)

# கண்டாவளை பிரதேச செயலக ஊழியர் ஒருவருக்குத் தொற்று

### செயலகத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தம்

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலக ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள நிலையில் செயலகத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.
கொடிகாமத்தைச் சேர்ந்த கண்டாவளை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் எழுமாற்றான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு நேற்றுமுன்தினம் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனை அடுத்து, நேற்று பிரதேச செயலக செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்டது. ஊழியர்களின் பி.சி.ஆர். முடிவுகள் வெளிவந்த பின்னர் பிரதேச செயலக செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும், பிறப்பு மற்றும் இறப்பு




அத்தாட்சிப் பத்திரங்கள் உட்பட்ட மிக அவசியமான தேவைகளை மாவட்டச் செயலகத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளுமாறும் பிரதேச செயலர் த.பிருந்தாகரன் தெரிவித்தார். (ப-6)

# மன்னாரில் 46,440 பேர் இதுவரை பைஸர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்

### மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், ஜூலை 27

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 46 ஆயிரத்து 440 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது ஊசி செலுத்தப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:
மன்னார் மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சமூக தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான சமூக தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஓரளவு நிறைவடைந்துள்ளன. அதன் அடிப்படையில் இதுவரையில் 52 ஆயிரத்து 144 பேருக்கு சமூகத் தடுப்பூசியின் முதலாவது ஊசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் 46 ஆயிரத்து 440 பேர் பைஸர் தடுப்பூசியின் முதலாவது ஊசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். 550 பேருக்கு 2ஆவது ஊசி வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் மற்றும் கல்வியியல் கல்லூரி மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கின்ற 666 மாணவர்களுக்கு முதலாவது பைஷர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாவட்டத்தில் 68 சதவீதம் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கான 2ஆம் கட்டத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை எதிர்வரும் 5ஆம் திகதியில் இருந்து மேற்கொள்ளப்படும்.
இந்த மாதம் தற்போது வரை 148 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த வருடத்தில் மொத்தம் 940 தொற்றாளர்களும் தற்போது வரை 957 தொற்றாளர்களும் மன்னார் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டாலும் தொடர்ந்தும் சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.
தடுப்பூசி வழங்கப்படுவது பாரதூரமான கொரோனாத் தொற்று ஏற்படுவதைத் தவிர்க்கவே. தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவர்களுக்கு அந்த நோய் பாரதூரமாக அமையாவிட்டாலும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு அவர்கள் மூலம் நோய் ஏற்படுகின்றபோது அவர்களுக்கு பாரதூரமான விளைவுகள் ஏற்பட சந்தர்ப்பம் உள்ளது.
இதை அனைவரும் புரிந்து கொண்டு தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டாலும் சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டும் - என்றார். (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் 2 கிராமங்கள் உவராக மாற்றமடையும் அபாயம்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**கிளிநொச்சி, ஜூலை 27**

**கிளிநொச்சி மாவட்டத்தில் இரு கிராமங்கள் முழுமையாக உவரடையும் ஆபத்தை தடுப்பதற்கு, கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.**



இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவின் வன்னேரிக்குளம் மற்றும் ஆனைவிழுந்தான்குளம் கிராமங்கள் உவர் ஆபத்தால் முழுமையாக அழிவுகளை எதிர்கொள்கின்ற ஆபத்தில் உள்ளன. மண்டைக்கல்லாறு வழியாக உவர் நீர் உட்புகுந்ததன் காரணமாக குஞ்சுக்குளம் கிராமம் முழு மையாக உவரடைந்து ஆயிரம் ஏக்கருக்கு மேலான வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன. குஞ்சுக்குளத்தின் அணைக்கட்டுக் காரணமாக வன்னேரிக்குளம் சூழலுக்கு உவர்ப் பரம்பல் ஏற்படவில்லை. ஆனாலும் மண்டைக் கல்லாறு வழியாகப் பரவிய உவர் நீர் ஆனைவிழுந்தான் மேற்குப் பகுதியை முழுமையாக உவராக்கியதால் இப்பகுதியில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த பத்தாண்டுகளில் உவர்ப் பரம்பலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் இரு கிராமங்களும் விரைவாக உவரடையும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. மண்டைக்கல்லாறுப் பகுதியில் நிரந்தர உவர்த் தடுப்பணை அமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும். வன்னேரிக்குளத்தில் 450 குடும்பங்களும் ஆனைவிழுந்தான் கிராமத்தில் 385 குடும்பங்களும் தற்போது வாழ்கின்றன. 2000 ஆம் ஆண்டில் பூநகரியின் பல்லவராயன்கட்டுக் கிராமத்தில் உவர்ப் பரம்பல் தொடங்கியபோது நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் தற்போது பல்லவராயன்கட்டுக் கிராமம் முழுமையாக உவரடைந்துள்ளது - என்றனர். (ப-13)

# குளங்களுக்கு நீர் வருவதற்கு நடவடிக்கையை மேற்கொள்க

## தருமபுரம் மக்கள் கோரிக்கை

தருமபுரம், ஜூலை 27

கண்டாவளை பிரதேசத்துக்கு உட்பட்ட தமரபுரம் சம்புக்குளம் மற்றும் ஆலங்குளம் ஆகிய குளங்களுக்கு தண்ணீர் வராமையால் பெரும் பாதிப்புக்கள் எதிர்கொள்ளப்படுகின்றன என மக்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய வறட்சி காரணமாக தருமபுரம் முதலாம் பகுதியில் அமைந்துள்ள சம்புக்குளம் மற்றும் மூன்றாம் பகுதியில் அமைந்துள்ள ஆலங்குளம் போன்ற குளங்கள் தண்ணீரின்றிக் காணப்படுகின்றன. மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் குளங்களில் தண்ணீர் இல்லாததால் அலைந்து திரிகின்றன. இந்தக் குளங்களுக்கு வருடம் தோறும் தண்ணீர் விடுவதற்கான அனுமதி நீர்பாசனத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை தண்ணீர் விடப்படவில்லை. குளங்களுக்கு தண்ணீர் வந்தால் எங்களின் வீடுகளில் உள்ள கிணறுகளிலும் தண்ணீர் அதிகரிக்கும் அதைக் கொண்டு சிறுதானியம், வீட்டுத்தோட்டம் என்பவை வற்றை மேற்கொள்ள வாய்ப்புகள் இருந்தன. தற்பொழுது அதற்கும் வழியின்றியுள்ளது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து குளத்துக்கு தண்ணீர் வருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் - என்றனர்.

'குளங்களுக்கான கால்வாய்களைத் துப்புரவுசெய்ய எவரும் முன்வராததால் குளங்களுக்கு தண்ணீர் கொண்டுவருவதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன' என்று கமக்கார அமைப்புகள் தெரிவித்தன. (ப-113)



வடமாகாண பிரதம செயலாளராக யாழ்ப்பாணத்தில் பதவியேற்ற சமன் பந்துலசேன வவுனியா ஸ்ரீ கந்தசாமி ஆலயத்தில் பூசை வழிபாட்டில் ஈடுபட்டார். (ப-18)



# சுகாதார விதிமுறைகளை மீறி ஆலயங்களில் திருவிழாக்கள்

## சுகாதாரப் பிரிவினர் கவலை

சாவகச்சேரி, ஜூலை 27

கோவில்களில் திருவிழா மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில் சிலர், சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்படும் நிபந்தனைகளை மீறிச் செயற்படுவது குறித்து சுகாதாரப் பிரிவினர் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

கொரோனா காலத்தில் கோவில்களில் வழிபாடு நடத்த அரசால் தடைசெய்யப்பட்டிருந்தது. யாழ். மாவட்டத்தின் கோவில்களில் திருவிழாக்கள், பொங்கல் உற்சவங்கள் நடத்தும் காலங்களில் கொரோனாத் தொற்றுக் காரணமாக விதிக்கப்பட்டிருந்த தடையை மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் எடுத்துக் கூறியதன் பயனாக நிபந்தனைகளுடன் திருவிழாக்கள் செய்ய அனுமதிக்கப்பட்டது.

இந்த நிபந்தனைகள் கோவில் உற்சவங்களின் போது மீறப்படுவதை நேரில் காண முடிகிறது. சுவாமி வீதியில் வரும்வேளையில் சமூக இடைவெளி பேணப்படாமை, சுவாமியைத் தூக்கி வருவோர் முகக்கவசங்களை நாடியில் அணிந்திருப்பது போன்றவை மக்களால் அவதானிக்கப்பட்டு சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாத் தொற்று உள்ள ஒருவர் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது திரு விழாக்களில் பங்குபற்றும், அனைவரையும், பாதிப்புக்கு உள்ளாக்கும் என்பதை மக்கள் மறந்துவிடக்கூடாது. கோவில்களில் திருவிழாக்கள் நடைபெறும் வேளையில் பங்குபற்றும் அனைவரும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும் திடீர் பரிசோதனையில் நிபந்தனைகளை மீறிச் செயற்படுவது கண்டுபிடிக்கப்படின் திருவிழா நடத்த வழங்கப்பட்ட அனுமதி நிறுத்தப்படும் - என்றனர். (ப-9)

# சந்நிதியானுக்கு ஓகஸ்ட் 8 இல் கொடி

## 21ஆம் திகதி தேர்

யாழ்ப்பாணம், ஜூலை 27

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும், மறுநாள் 18ஆம் திகதி புதன்கிழமை கைலாச வாகனத் திருவிழாவும், 20ஆம் தினதி வெள்ளிக்கிழமை சப்பை ரதத் திருவிழாவும், மறுநாள் 21ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும், 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை 6 மணியளவில் மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

மஹோற்சவ காலங்களில் காலைத் திருவிழா தினமும் காலை 7 மணிக்கும், இரவுத் திருவிழா மாலை 5 மணிக்கும் ஆரம்ப (ப-159)

# வடக்கு மாகாண பிரதம செயலாளராக சமன் பந்துலசேன நேற்று பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாண பிரதம செயலாக நியமிக்கப்பட்ட சமன் பந்துலசேன நேற்று தனது பதவியைப் பொறுப்பேற்றார். வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் அவர் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றார். வவுனியா மாவட்டச் செயலராகக் கடமையாற்றிய பந்துலசேன ஜனாதிபதியால் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டார். சிங்கள இனத்தைச் சேர்ந்த ஒருவர் வடக்கு மாகாணத்துக்கு பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டமைக்கு அரசியல் தரப்புக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில், அவர் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது. (ப-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹிஷாலினிக்கு நீதிகோரி வவுனியாவில் போராட்டம்

**வவுனியா, ஜூலை 27**
**முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிப்பெண்ணாகப் பணியாற்றி, உயிரிழந்த ஹிஷாலினிக்கு நீதிவேண்டி வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்ற பெண்கள் ஒன்றியம் மற்றும், சிவில் சமூக அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளன. அந்தவகையில் கொழும்பில் உயிரிழந்த ஹிஷாலினி என்ற சிறுமியின் இறப்புக்கு காரணமானவர்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் சிறுமியின் உயிரிழப்புக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்று தொடர்புடைய அதிகாரிகளைக் கோரிநிற்கின்றோம். தற்போது சிறுமிகள், பெண்கள் மீதான துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வரும்நிலையில் நாட்டின் பெண்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது கேள்விக்குறியாகவுள்ளது. எமது நாட்டின் பெண்கள் சுயகௌரவத்துடன் பாதுகாப்பாக வாழும் சூழ்நிலையை அரசு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிறுவர் துஸ்பிரயோகத்துக்கு எதிரான கோஷங்களை எழுப்பியிருந்ததுடன், பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். (ப-110)

சிறுவர்களை

## வேலைக்கு அமர்த்துவதை தடுக்க அவசர சட்டவரைவு



கொழும்பு, ஜூலை 27
சிறுவர்களை வேலைக்கமர்த்துவதைத் தடுக்கும், அவசர சட்டவரைவு, விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு வேலை வழங்குவதைத் தடுப்பதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம். சிறுவர்களுக்காக தனி நீதிமன்றங்களை நிறுவுவதற்கும், துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்ட சிறுவர்களின் சாட்சியங்களை வீடியோ தொழில்நுட்பத்தின் மூலம் பெறுவதற்கும் புதிய சட்டங்களைக் கொண்டு வருவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருகின்றன. ஒவ்வொரு மாகாணத்திலும் சிறுவர்களுக்காக தனி நீதிமன்றம் அமைப்பதற்கான முன்மொழிவு நீதிச் சேவை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது- என்றார். (4)

## ஹிஷாலினி விவகாரத்தில் அரசியல் தலையீடு இராது

*இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 27
நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத்தின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டு, தீக்காயங்களுக்குள்ளான நிலையில் உயிரிழந்த சிறுமி ஹிஷாலினி விவகாரத்தில் அரசியல் தலையீடு இருக்காது. அதற்கான தேவையும் அரசுக்குக் கிடையாது என்று மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சிறுவர்களைத் தொழிலுக்கு அமர்த்துவது குற்றச்செயலாகும். பொறுப்பு வாய்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரது வீட்டில் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை பாரதூரமானது. இலவசக்கல்வி வழங்கப்படும் நாட்டில் மாணவர்களின் கல்விக்கு குடும்ப வறுமை ஒரு தடையாக இருப்பதும் ஆச்சரியத்துக்குரியது.
இந்தச் சிறுமியின் இறப்பைத் தொடர்ந்து சமூக வலைத்தளங்களில் வெளியாகும் ஒரு சில செய்திகள் மற்றும் அதற்கு இரு சமூகத்தை சேர்ந்தவர்களும் பதிவிடும் கருத்துக்களும் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளன.
எனினும் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சம்பவம் ஒரு போதும் மறைக்கப்படமாட்டாது. சிறுமியின் இறப்புக்கான காரணிகள் விரைவில் பகிரங்கப்படுத்தப்படும்- என்றார். (4)



## சிறுவர்களுக்கான தொழில் புதிய ஒழுக்கவிதி தயார்!

கொழும்பு, ஜூலை 27
16 தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை எவ்வகையான தொழில்களில் ஈடுபடுத்த முடியும் என்பது தொடர்பான ஒழுக்க விதிகள் உருவாக்கப்படும் என்று தொழில் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.
சிறுவர்களை எந்தெந்த தொழில்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்பது தொடர்பான பட்டியல் ஒன்றையும் வெளியிடவுள்ளோம்.
அதற்கமைவாக ஆழ்கடல் மீன்பிடித்தல், இரத்தினக்கல் அகழ்வு, மணல் அகழ்வு, இரும்பு தொழிற்சாலைகள், இரசாயன நிறுவனங்களில் பணிக்கு அமர்த்துதல் உள்ளிட்ட தொழில்களில் சிறுவர்களைப் பணிக்கு அமர்த்துவதற்குத் தடை விதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

சிறுவர் துஷ்பிரயோகம்

## ஆறு மாதங்களில் 4,740 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 27
சிறுவர்கள் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்பில், கடந்த ஆறு மாதங்களுக்குள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 4 ஆயிரத்து 740 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.
இது தொடர்பில் அதிகார சபையின் தலைவர் முதித்த விதான பத்திரன தெரிவிக்கையில்,
சிறுவர்களுக்குப் பாதுகாப்பற்றது என அறிவிக்கப்பட்ட பல தொழில்களின் எண்ணிக்கை 76ஆக உயர்த்தப்படும். இது அடுத்த இரண்டு மாதங்களுக்குள் சட்டமாக மாற்றியமைக்கப்படும். இதேவேளை சிறுவர்களை வீட்டுப் பணியாளர்களாகப் பயன்படுத்துகின்ற நபர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.
முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் 16 வயதுடைய சிறுமி சந்தேகத்துக்கிடமான சூழ்நிலையில் உயிரிழந்த சம்பவம் வருத்தமளிக்கின்றது. இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்கக்கூடாது- என்றார். (4)

## விபத்தை ஏற்படுத்தியமைக்காக முன்னாள் எம்.பி. நேற்று கைது



கொழும்பு, ஜூலை 27
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், நடிகையுமான உபேக்ஸ ஸ்வர்ணமாலி கட்டுகஸ்தோட்டை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கண்டியிலிருந்து குருநாகல் நோக்கிச் சென்றுகொண்டிருந்த அவர் பயணித்த வாகனம், கட்டுகஸ்தோட்டை, நுகவெலப் பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் காயமடைந்தார். இதனையடுத்து நடிகை கைதுசெய்யப்பட்டுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் வெற்றியை தடுத்தவர்களே இன்று அரசுக்கு எதிராக களத்தில்

## அரசு குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூலை 27**

**புலிகளுக்கு எதிரான போரை விடவும் கொரோனாவுக்கு எதிரான போர் பயங்கரமானது. நாட்டில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதை தடுப்பதற்கு முற்பட்ட தரப்பே, இன்று போராட்ட அலையை உருவாக்கி, அரசு முன்னோக்கிப் பயணிப்பதை குழப்புவதற்கு முற்படுகின்றது என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் 3 தசாப்தங்கள் நிலவிய போர், 2009ஆம் ஆண்டில் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. போரை இராணுவம் முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முற்பட்ட வேளை, எதிரணியிலுள்ள சில தரப்பினர், அதனைத் தடுப்பதற்காக நாடு முழுவதும் வேலை நிறுத்தப் போராட்ட அலையை உருவாக்குவதற்கு முற்பட்டனர். அன்று போராட்ட அலையை ஏற்படுத்தி போர் வெற்றியை தடுப்பதற்கு முற்பட்ட தரப்பினரே இன்றும் மீண்டும் வேலை நிறுத்த போராட்ட அலையை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றனர்.

புலிகளுடன் வடக்கில் போர் நடைபெறும்போது தெற்கில் ஹோட்டல்கள் மூடப்படவில்லை. சுற்றுலாப் பயணிகளின் வருகை தடைப்படவில்லை. பாடசாலைகள் மூடப்படவில்லை. ஆனால் இன்று நிலைமை வேறு. எனினும் தடுப்பூசித் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அரசு பாடுபடுகின்றது. இந்தநிலையில் புறக்கணிப்பு மற்றும் போராட்ட அலையை உருவாக்குவதற்கு முற்படுவதானது, 2009ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்வுக்கு ஒப்பானதாகும்.

கொரோனாவைமுடிவுக்குக்கொண்டு வந்து, நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு எமது அரசு முற்படுகின்றது. எனவே, உள்நோக்கத்துடன் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்று மக்களிடம் கோருகின்றோம் - என்றார். (ம-4,44)

# ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது சாத்தியமில்லை

## அமைச்சர் பந்துல கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 27



இலங்கை பொருளாதார நெருக்கடி நிலையைச் சந்தித்துள்ளதால், ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பை இப்போது வழங்குவது சாத்தியமில்லை என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: 'ஆசிரியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை நான் 100 வீதம் ஏற்றுக்கொள்கின்றேன். ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு உட்பட நலன்புரி நடவடிக்கைகளைச் செய்வதானால், மேலதிகமாக வரி விதிப்பதைத் தவிர வேறு வழியில்லை. நாட்டில் மேலதிக வரி விதிப்புகளைச் செய்தால், பொது மக்களே பாதிக்கப்படுவார்கள்' - என்றார். (ம-22)

# சட்டவரைவை தோற்கடிப்போம்

## ஸ்டாலின் உறுதி

கொழும்பு, ஜூலை 27

கல்வியைத் தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன. அந்தவகையில் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டவரைவைத் தோற்கடிப்போம் என்று இலங்கை ஆசிரிய சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கல்வியை தனியார் மயப்படுத்துவதற்கு எதிராக, இன்று உலகம் முழுவதிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. கல்வியைத் தனியார் மயப்படுத்திய நாடுகளிலும் அதற்கு எதிரான போராட்டங்கள் வலுத்து வருகின்றன.

எனவே இது இலகுவான காரியமல்ல என்று அரசுக்கு கூறிக்கொள்ள விரும்புகின்றோம். நாம் ஒன்றிணைந்து இந்தச் சட்டவரைவைத் தோற்கடிப்போம் என்றார். (ம-4)




# எரிவாயு விற்பனையில் மோசடியெனின் முறையிடுக

## பாவனையாளர் அதிகார சபை அறிவிப்பு

வவுனியா, ஜூலை 27

சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை தொடர்பில் மோசடிகள் இடம்பெற்றால் வவுனியா பாவனையாளர் அதிகார சபையினரை தொடர்புகொள்ளுமாறு அதன் பொறுப்பதிகாரி நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது:

சமையல் எரிவாயுவின் விலை தொடர்பான மோசடிகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். நாடு முழுவதும் வீட்டுப் பாவனைக்கு உபயோகிக்கும் சமையல் எரிவாயு அண்மைக்காலமாக இரு வேறுபட்ட அளவுகளில் சந்தையில் விற்பனை செய்யப்படுவது நுகர்வோர் மத்தியில் குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளது. 12.5 கிலோகிராம் சமையல் எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை வவுனியா மாவட்ட எல்லைக்குள் 1,559 ரூபாவாக உள்ளது. எனினும் கடந்த சில மாதங்களாக 18 லீற்றர் பிறிமியம் என அறிமுகம்செய்யப்பட்ட எரிவாயு கொள்கலனானது 1,461 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதன் எடை உண்மையில் 9.18 கிலோகிராம் என்பது குறிப்பிடத் தக்கது.

நேற்று முதல் இவ்வாறு புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட 18 லீற்றர் பிறிமியம் எரிவாயு கொள்கலனின் புதிய விற்பனை விலை தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது. அதனடிப்படையில் நேற்று முதல் வவுனியா மாவட்ட எல்லைக்குள் புதிய விலையாக 1,216 ரூபா நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 12.5 ரூபா சமையல் எரிவாயு கொள்கலன், 18 லீற்றர் பிறிமியம் என அறிமுகம்செய்யப்பட்ட எரிவாயு கொள்கலன் ஆகிய இரண்டுமே கொள்கலனின் அளவு ஒன்றாகவே இருக்கும். அதேவேளை உள்ளீடு செய்யப்பட்ட (நிரப்பப்பட்ட) எரிவாயுவின் அளவுகளில் உள்ள வேறுபாடே விலை வேறுபடக் காரணமாகும். அத்துடன் விற்பனை நிலையங்களில் எரிவாயு கொள்கலன்களின் நிறை அளவு மற்றும் அவற்றின் விலை என்பவை தெளிவாகக் காட்சிப்படுத்தல் அவசியமாகும். இது தொடர்பாக மோசடிகள் இடம்பெற்றால் வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் முறைப்பாடு செய்யுமாறு கேட்கப்படுகிறீர்கள். நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் ஏனைய அளவுகளைக் கொண்ட எரிவாயு கொள்கலன்களின் விலைகளில் எந்தவொரு மாற்றமும் இல்லை - என்றுள்ளது (ப-110)

# எம்.பிக்களுக்கு விசேட செயலமர்வு

கொழும்பு, ஜூலை 27

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டவரைவு தொடர்பில் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெளிவுபடுத்தும், விசேட செயலமர்வு அடுத்த மாதம் 3ஆம் திகதி நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

இந்த சட்டவரைவு தொடர்பில் நாடு முழுவதிலும் பல்வேறு போராட்டங்களை ஆசிரிய தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்களது அமைப்புக்கள் உள்ளிட்ட அமைப்புகள் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன.

இந்த நிலையில் சட்டவரைவு தொடர்பில் தெளிவுபடுத்தும் செயலமர்வு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இதற்காக எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. கல்வி தொடர்பான நிபுணர்கள் பலரும் இதில் பங்கேற்கவுள்ளனர். அதேவேளை இந்த சட்டவரைவு தொடர்பான இரண்டாம் நாள் விவாதம் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம-4)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான மூவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, ஜூலை 27

குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில், இரு நாள்களில் மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் வடக்கில் 51 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவரும், குடமியன் பகுதியில் 46 வயதுடைய குடும்பத்தலைவர் ஒருவரும், நேற்றுமுன்தினம் காலை கொடிகாமத்தைச் சேர்ந்த 70 வயது முதியவரும் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தக் குளவிகள் எங்கிருந்து வருகின்றன என்று தெரியவில்லை எனவும், நேற்றுமுன்தினம் தொடக்கம் கடுமையான காற்று வீசுவதால் கூடு கலைந்து பறந்து திரியலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. குளவிக்கூடு அமைந்துள்ள பகுதியைக் கண்டால் தம் முடன் தொடர்பு கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தேசமற்றோருக்கான அங்கீகாரம்

முன்னைய ஒலிம்பிக் போட்டிகளை விடவும் இம்முறை ஜப்பானில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டி வித்தியாசமானது. அகதிகள் என்று அழைக்கப்படும் நாடற்றவர்களுக்கான அங்கீகாரத்துக்கான முன்னுதாரணமாக மாறியிருக்கிறது இந்த ஒலிம்பிக் போட்டி.

அதிகார வெறியால் அடக்கியாளப்படும் இனங்கள், அவற்றால் எழும் போர்கள், கிட்டும் அசாதாரண சூழல்கள் என்பவற்றில் இருந்து தப்பிப் பிழைக்கவும், வறுமை, உயிர்ச் சேதம் என்பவற்றில் இருந்து காத்துக் கொள்ளவும் என தினமும் பலர் அகதிகளாகின்றனர். உலகில் தினமும் 37 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்து கொண்டே இருக்கின்றனர் என்கின்றன தரவுகள். உலகெங்கும் 8 கோடிப் பேர் அகதிகள் என்ற நாமத்தோடு வாழ்கின்றனர்.

தங்களது அடையாளத்துக்காக நித்தமும் போராடிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு இந்த ஒலிம்பிக் ஒரு அங்கீகாரத்தை உத்வேகத்தைக் கொடுத்திருக்கிறது. ஒலிம்பிக் ஆரம்ப விழாவில் எப்போதும் கிரீஸ் நாடே முதலில் கொடியேந்திச் செல்லும். அதைத் தொடர்ந்து நாடுகள் அணிவகுக்கும். இம்முறை கிரீஸுக்கு அடுத்து ஒலிம்பிக் சின்னம் பொறித்த கொடியோடு வீரர் வீராங்கனைகள் அடங்கிய ஒரு குழு அணிவகுத்தது. அதுதான் அகதிகளுக்கான குழு.

கண்ணியமற்ற முறையில் நடத்தப்படும் அகதிகளுக்கு ஒரு அங்கீகாரத்தை கொடுக்க வேண்டும் என சர்வதேச நாடுகளின் கூட்டமைப்பில் 2015ஆம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டது. அதன் பின்னர் ஒலிம்பிக் வரலாற்றில் முதல் முறையாக அகதிகளுக்கான ஒரு அணி உருவாக்கப்பட்டு ரியோ ஒலிம்பிக்கிலும் கலந்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இந்த முறை டோக்கியோ ஒலிம்பிக்கில் அவ்வாறான அணி பங்கேற்றிருக்கிறது.

சிரியா, காங்கோ, சூடான், எரித்ரியா, வெனிசூலா, ஈரான், ஆப்கானிஸ்தான், கேமரூன் என பல நாடுகளை சேர்ந்த அகதிகளாக வாழ்வுரிமை பறிக்கப்பட்ட 29 பேர் 12 விதமான போட்டிகளில் பங்கேற்றுக் கொண்டிருக்கின்றனர். தங்களைக் கணக்கில் எடுக்காது தூக்கி எறிந்தவர்கள் முன்பு முட்டி மோதித் தங்களின் அடையாளத்தை நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர்.

அகதி எனும் கொடிய வலி தமிழர்களுக்கும் புதியதல்ல. ஓரிரு நாடுகளை விடவும் அகதிகள் என்போரை எவரும் ஏற்றுக்கொள்வதில்லை. இலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளுக்கு அஞ்சியும், அதன் காரணமாக உருவான போராலும் பல லட்சம் தமிழ் மக்கள் உலகெங்கும் அகதி என்ற முத்திரையுடன் தங்கள் வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். முகாம்களிலும், தனிமைப்படுத்தப்பட்ட தீவுகளிலும் தங்கள் வாழ்க்கையை ஏக்கங்களுடன் கடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த முன்னுதாரணங்களைத் தமிழர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு சிறு வட்டத்துக்குள் முடங்கிவிடாது, உடைந்து நொருங்கிவிடாது அடையாளத்தைக் கட்டியெழுப்ப அயராது முயல வேண்டும். தமிழ் மக்களின் அவலங்கள், அவர்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளை உலகறியச் செய்யவும், விரட்டியடித்தவர்கள் முன்பாக நிமிர்ந்து நிற்கவும் இத்தகைய முயற்சி அவசியம்.




# அசோலா பாவித்தால் உரப்பாவனை குறையும்

## புதுக்குடியிருப்பு விவசாயி ஆலோசனை

**முல்லைத்தீவு, ஜூலை 27**

**வயல் நிலத்துக்கு அசோலா பாசியை பாவித்தால் உரத்தின் பாவனையைக் குறைக்கலாம் என்று புதுக்குடியிருப்பு விவசாயி ஒருவர் தெரிவித்துள்ளார்.**



முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கமநல சேவைகள் பிரிவில் மருதங்குளத்தின் கீழ் இம்முறை சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு கோம்பாவிலைச் சேர்ந்த அருந்தவராசா என்ற விவசாயி ஏனைய விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக சிவப்பு நெல்லை விதைத்து நெல்லின் விளைச்சலை அதிகரித்ததோடு, களையையும் கட்டுப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வயல் நிலங்களில் உள்ள பன்றி நெல் எனப்படும் களையை அழிப்பதற்கு முயற்சி எடுத்தும் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. களையை கட்டுப்படுத்துவதற்காக சிவப்பு நெல்லை எந்த அறிமுகமும் இல்லாமல் இரண்டு ஏக்கருக்கு விதைத்தேன். நல்ல அறுவடை கிடைத்தது. களையையும் கூலி கொடுத்து கட்டுப்படுத்த முடிந்தது. இந்த சிவப்பு நெல்லுக்கு ஒரு மதிப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தற்போது எனக்கு நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. இதனால் தொடர்ந்து அடுத்த போகத்துக்கு பத்து ஏக்கருக்கு இந்த நெல்லை விதைக்க முடிவு செய்துள்ளேன். வயலுக்கு தண்ணீர் கட்டும் போது அசோலா பாசியை விட்டேன். அது விளைச்சலைக் கொடுத்துள்ளது. அசோலா பாசி நிலத்துக்கு நைதரசனின் செறிவைக் கூட்டும். இதனை பாவிப்பதன் ஊடாக ஏனைய பசளைகளின் வீதத்தை குறைத்துக் கொள்ளலாம்.

அசோலா பாசியை வயலுக்கு இடுவதன் ஊடாக அது தண்ணீரில் பெருகும். இதனால் விவசாய மண்ணின் வளம் பாதுகாக்கப்படும். அசோலா பாவிப்பதால் பசளை இல்லாத காலத்திலும் அந்தச் சவாலை எதிர்கொள்ளலாம். பசளைப் பாவனையைக் குறைப்பதற்கும் வழிவகுக்கும் - என்றார். (ப-19)

# மோ.சைக்கிள் திருடியவரை மோப்பம் பிடித்தது பொலிஸ்


## மோ.சைக்கிளும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வீதியோரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடியவர் சில மணிநேரங்களிலேயே சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

மானிப்பாய் - சண்டிலிப்பாய் வீதியின் கரையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அதன் உரிமையாளர் சென்றுள்ளார். மீள வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிள் காணாமற்போயிருந்தது. அந்த இடத்தில் துவிச்சக்கரவண்டி ஒன்று காணப்பட்டது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டது. இந்த நிலையில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை அடையாளம்கண்ட சுன்னாகம் சிறப்பு குற்றத்தடுப்புப் பொலிஸார், அதனை வைத்திருந்தவரைக் கைது செய்து விசாரணைகளின் பின் மானிப்பாய் பொலிஸாரிடம் முற்படுத்தினர். திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் மானிப்பாய் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது. (ப-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவின் பல இடங்களில் நில நடுக்கம்

புதுடில்லி, ஜூலை 27
ஹைதராபாத்தின் தெற்கு பகுதியில் நேற்று திங்கட்கிழமை மிதமான நில நடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் 4.0 என்ற ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை.

அதேநேரம் சிக்கிம் மாநிலத்திலும் 4.0 என்ற ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளது என்று தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் பல பாகங்களிலும் அண்மைக்காலமாக நிலநடுக்கங்கள் உணரப்பட்டு வருகின்றன. (எ-இ)



# மகாராஷ்டிராவில் பெரும் வெள்ளம்!

புதுடில்லி, ஜூலை 27
இந்தியா, மகாராஷ்டிராவில் தொடரும் பலத்த மழை காரணமாக உண்டான வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களில் சிக்குண்டு சனிக்கிழமை இரவு வரை 112 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் 99 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும், 53 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் மகாராஷ்டிராவில் நிவாரண மற்றும் மறுவாழ்வுத்துறை தெரிவித்துள்ளது.

இதேவேளை உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இந்திய நாணய மதிப்பில் தலா 5 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது. வெள்ளம், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. மகாராஷ்டிரத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரமடைந்து வருகிறது. ராய்கட், ரத்னகிரி, கொல்ஹாபூர் உள்ளிட்ட மாவட்டங்கள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. (எ-9)

# உயிரை பறித்த செல்பி

புதுடில்லி, ஜூலை 27
துப்பாக்கியை வைத்து செல்பி எடுக்க முயன்றபோது, துப்பாக்கி வெடித்து இளம் பெண் உயிரிழந்துள்ளார். இந்தியாவின், உத்தர பிரதேச மாநிலம் ஹர்டா மாவட்டத்தில் இந்த சம்பவம் நடந்தது. அந்தப் பகுதியைச் சேர்ந்தவர் ராஜேஷ் குப்தா. இவர் மகன் ஆகாஷ் குப்தா. ஆகாஷுக்கும் ராதிகா என்பவருக்கும் கடந்த மே மாதம் திருமணம் நடந்தது. ராஜேஷ் குப்தா தனது வீட்டில் ஒற்றைக் குழல் துப்பாக்கி ஒன்றை வைத்துள்ளார்.

செல்பி எடுப்பதில் ஆர்வம் கொண்ட ராதிகா, குண்டு நிரப்பப்பட்ட ஒற்றைக்குழல் துப்பாக்கியை தனது முன் நிறுத்தியபடி, ரிகரில் கையை வைத்துக்கொண்டு செல்பி எடுத்தார். அப்போது, எதிர்பாராதவிதமாக ரிகரில் கை அழுத்தியதால் துப்பாக்கி வெடித்தது. ராதிகா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து ராஜேஷ் குப்தா கூறும்போது, "பஞ்சாயத்து தேர்தல் காரணமாக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட துப்பாக்கியை என் மகன் வீட்டுக்கு வாங்கி வந்தார். அப்போது மருமகள் அதைக்கொண்டு செல்பி எடுக்கும்போது தவறுதலாக குண்டு பாய்ந்து உயிரிழந்துவிட்டார்" என்றார். அவர் துப்பாக்கியுடன் எடுத்த செல்பி ஒளிப்படத்தையும் அவர்கள் காவல் நிலையத்தில் சமர்பித்துள்ளனர். அதேவேளை, ராதிகாவின் தந்தை, வரதட்சணையுடன் தொடர்புடைய மரணம் என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (எ-இ)



# டிராக்டரில் சென்ற ராகுல் காந்தி!

புதுடில்லி, ஜூலை 27
இந்திய மத்திய அரசு கொண்டுவந்துள்ள 3 வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விவசாயிகள் பிரச்சினையில் தீர்வு காணவும் வலியுறுத்தி காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி நேற்று டிராக்டரில் நாடாளுமன்றம் சென்றார்.

மத்திய அரசு கடந்த ஆண்டு கொண்டுவந்த புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அந்தச் சட்டங்களைத் திரும்பப்பெற வலியுறுத்தியும் விவசாயிகள் புதுடில்லியின் புறநகர் பகுதிகளில் கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதியிலிருந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். விவசாயிகள் நடத்திவரும் போராட்டத்துக்குத் தீர்வுகாண விவசாயிகள் மற்றும் மத்திய அரசு இடையே 12 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தியும் தோல்வியில் முடிந்தன. இதற்கிடையே வேளாண் சட்டங்களை தற்காலிகமாக நடைமுறைப்படுத்த உச்ச நீதிமன்றம் தடைவிதித்து, அந்தச் சட்டங்களை ஆய்வு செய்யக் குழு அமைத்துள்ளது.

இந்தநிலையில் நாடாளுமன்ற உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவருமான ராகுல் காந்தி, நேற்று டிராக்டர் ஓட்டிக்கொண்டு நாடாளுமன்றத்துக்குச் சென்றிருந்தார். விவசாயிகளுக்கு ஆதரவாகவும், விவசாயிகள் போராட்டத்துக்கு தீர்வு காணவும் வலியுறுத்தி ராகுல் காந்தி டிராக்டரில் நாடாளுமன்றம் சென்றிருந்தார்.

ராகுல் காந்தியுடன் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஊர்வலமாகச் சென்றதுடன், மத்திய அரசுக்கு எதிராகவும், வேளாண் சட்டங்களுக்கு எதிராகவும் கோஷங்களையும் எழுப்பினர். (எ-இ)

# வளர்ப்பு நாய்க்கு சிலை



சென்னை, ஜூலை 27
தனது வளர்ப்பு நாய்க்குச் சிலை அமைத்து, ஊராருக்கு விருந்துபசாரம் செய்து நினைவு நாளைக் கொண்டாடியுள்ளார் ஒருவர்.

ஆந்திர மாநிலம், கிருஷ்ணா மாவட்டம், பாபுலபாடு மண்டலத்தில் உள்ள அம்பாபுரத்தை சேர்ந்த விவசாயி ஞானபிரகாஷ் ராவ். இவர் சில ஆண்டுகளாக 'சுனக ராஜா' எனும் நாயை பாசத்துடன் வளர்த்தார். அந்த நாயும் இவர்களின் குடும்பத்தாரோடு மிகவும் அன்பாகவும், பாசமாகவும் இருந்தது. இதனிடையே ஞானபிரகாஷ் தனது 2 மகள்களுக்கு திருமணமும் செய்து மாமியார் வீடுகளுக்கு அனுப்பி வைத்தார்.

மனைவியும் ஏற்கனவே இறந்து விட்டதால், வீட்டில் ஞானபிரகாஷுக்கு துணையாக 'சுனக ராஜா' மட்டுமே இருந்தது. அது கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் உடல் நலம் சரியின்றி இறந்துவிட்டது. அதிலிருந்து அந்த நாயின் நினைவு நாளை ஞானபிரகாஷ் மிகவும் தடபுடலாக அனுசரித்து வருகிறார்.

அதேநேரம் அந்த நாய்க்கு தனது வீட்டில் வெண்கல சிலையையே வைத்து மாலை போட்டு, அதற்கு பிடித்தமான உணவுகளை படைத்து அனுசரித்தார் ஞானபிரகாஷ். அந்த ஊர்க்காரர்களை வீட்டுக்கு அழைத்து விருந்தும் படைத்திருக்கிறார். (எ-இ)

# தரம் தாழ்த்திப் பேசியதால் மாணவி தவறான முடிவு!

சென்னை, ஜூலை 27
காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே ஆசிரியர் தரம் தாழ்த்திபேசியதால், மனம்உடைந்த கல்லூரி மாணவி 3ஆவது மாடியில் இருந்து குதித்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

ஸ்ரீபெரும்புதூர் அடுத்த தண்டலம் பகுதியில் தனியார் மருத்துவ கல்லூரி இயங்கி வருகிறது. இந்த கல்லூரியில் அம்பத்தூர் அருகேயுள்ள புதூர் பகுதியைச் சேர்ந்த சோனாலி என்ற மாணவி முதலாம் ஆண்டு சுகாதாரவியல் பயின்று வந்துள்ளார். இவர் பரீட்சை மண்டபத்தில் கைபேசி வைத்திருந்தார் என்று கூறப்படுகிறது.

கைபேசி மூலம் விடைகளை பெற்றார் எனக் கூறி, கண்டித்த ஆசிரியர் தரம் தாழ்த்திப் பேசி, மாணவியை அறையை விட்டு வெளியேற்றினார் என்று கூறப்படுகின்றது. இதனால் மனமுடைந்த மாணவி மூன்றாவது மாடியில் இருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், மாணவியின் உடலைக் கைப்பற்றி வைத்தியசாலையில் சேர்ப்பித்ததுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெபனானின் நிலைமை இலங்கைக்கும் ஏற்படும்

## சம்பிக்க எச்சரிக்கைத்தொனி



கொழும்பு, ஜூலை 27

இலங்கையின் எரிபொருள் விநியோகத்துக்கான கேள்வி கோரலை ஏற்கமாட்டோம் என்று விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ள நிலையில், விரைவில் லெபனானின் நிலைமை இலங்கைக்கும் ஏற்படலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசு பொருளாதார அபிவிருத்தி குறித்து போலி நாடகமாடுகின்ற போதிலும், பல மாதங்களாக பணம் செலுத்தாமை காரணமாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் இலங்கையின் எரிபொருளுக்கான கேள்வி கோரலை ஏற்க மறுத்துள்ளனர். அரசின் பொருளாதாரக் கொள்கைகளால் லாப்ஸ் போன்ற சில வலுவான நிறுவனங்கள் வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. லாப்ஸ் நிறுவனத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் இலங்கையின் எரிவாயு சந்தைப்படுத்தும் தொழில்துறை மோசடிக் கும்பல்களின் கரங்களுக்குச் சென்றுள்ளது - என்றார். (ம-4)

# போர் வீரர்களின் நினைவுச்சின்னம் இடித்தழிப்பு

கொழும்பு, ஜூலை 27

இறக்குவானை தெமுவாத கடைப்பகுதியில் உள்ள போர் வீரர்களின் நினைவுச் சின்னம் மற்றும் அருகிலுள்ள புத்தர் சிலை ஆகியவை இடித்தழிக்கப்பட்டுள்ளன என்று இறக்குவானைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலத்தில் இந்த இடத்தில் இன்னுமொரு கடவுளின் சிலையை வைப்பதற்கு ஒரு குழு முயற்சித்தது. எனினும் மற்றொரு குழுவின் எதிர்ப்புக் காரணமாக அந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன் பின்னணியில் போர் வீரர்களின் நினைவுச்சின்னம் மற்றும் புத்தர் சிலை ஆகியவை அழிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக்காக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-4)



# ஏப்.21 தாக்குதல் 100 பேர் கைது

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் இதுவரை 100க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். முக்கிய சந்தேகநபர்கள் மீது விரைவில் வழக்குத் தொடரப்படும். குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை கிடைக்கும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றங்கள் குறித்து அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கேட்டறிந்துள்ளார். அத்துடன் இது தொடர்பான விசாரணைகளுக்காக சட்டமா அதிபர் பல சிறப்புக் குழுக்களை அமைத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

*திடீர் சுற்றிவளைப்பு*

# ரூ.25 லட்சம் பெறுமதியான போதைப்பொருள்கள் மீட்பு



கொழும்பு, ஜூலை 27

நாட்டில் பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின்போது, ஒரேநாளில் மட்டும், சுமார் 25 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருள்கள் மீட்கப்பட்டன. 5 சந்தேகநபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்ஹிட்டிய பிரதேசத்தில் 210 கிராம் ஹெரோய்னுடன் 41 வயதுடைய பெண்ணொருவரும், 50 வயதுடைய சந்தேக நபரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் போதைப் பொருளின் பெறுமதி சுமார் 21 லட்சம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று மொரட்டுவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 10 கிராம் ஹெரோய்னுடன் 25 வயதுடைய சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொஹுவல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் 15 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கிராண்பாஸ் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 10 கிராம் ஹெரோய்னுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# எரிபொருள்களின் விலையை திடீரெனக் குறைக்க முடியா

*நிதியமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு, ஜூலை 27

எரிபொருள்களின் விலையை திடீரெனக் குறைப்பது சாத்தியமற்றது என்று நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள்களின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நாம் எதிர்பார்த்துள்ளோம். ஆனால் அதனை உடனடியாகச் செய்ய முடியாது. வெளிநாட்டுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் வியாபாரமாக எரிபொருள்கள் இருப்பதால், அரிசி, தேங்காய் போன்ற எரிபொருள்களின் விலையைக் குறைக்க முடியாது. உள்நாட்டு நடவடிக்கைகள் மூலம் அரிசி, தேங்காய் போன்றவற்றின் விலைகளைக் குறைப்பது போன்று, எரிபொருள்களின் விலையை குறைக்க முடியாது - என்றார். (ம-4)

# கட்சியின் கொள்கையை மீறுவோருக்கு இடமில்லை

## ஐ.ம.சக்தி திட்டவட்டம்



கொழும்பு, ஜூலை 27

கூட்டணியில் கட்சிகளுக்கு சொந்தக் கொள்கைகள் இருந்தாலும், கட்சியின் கொள்கையை எவராவது மீறுவார்களாயின் அவர்களுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு எதுல்கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் கடத்தல், சிறுவர் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிகளுடன், இணைந்து பணியாற்ற முடியாது. சிறுவர்கள் மீதான அனைத்து வகையான துன்புறுத்தல்களையும் எமது கட்சி கண்டிக்கும். அதுவே கட்சி யின் நிலைப்பாடு. இருப்பினும், பதியுதீனின் வீட்டில் இடம்பெற்ற சிறுமியின் இறப்புத் தொடர்பில் நீதிமன்றால் உறுதிப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (ம-4)

# அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதிசெய்யத் தீர்மானம்

கொழும்பு, ஜூலை 27

நாட்டுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்களை நேரடியாக இறக்குமதிசெய்ய அரசு தீர்மானித்துள்ளது என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இறக்குமதிசெய்யப்படவுள்ள அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் தற்போது அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் தனியார் பிரிவின் தன்னிச்சையான செயற்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக தற்போது கலைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அரச வணிக கூட்டுறவு மொத்த வர்த்தக நிறுவனத்தை மீண்டும் வலுப்படுத்தி, அதன் ஊடாக குறித்த பொருள்களை இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சீனி, கோழி இறைச்சி, தேங்காய் எண்ணெய், பருப்பு, வெங்காயம் மற்றும் கிழங்கு போன்ற அத்தியாவசியப் பொருள்களை அந்த நிறுவனத்தின் ஊடாக நேரடியாக இறக்குமதிசெய்ய எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஒ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஞ்சனுக்கு மன்னிப்பு கலைஞர்களும் ஆதரவு

கொழும்பு, ஜூலை 27

நீதிமன்றை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில், நான்கு ஆண்டு கடூழியச் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் பிரபல சிங்களத் திரைப்பட நடிகரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்கவுக்கு, பொது மன்னிப்பு வழங்குமாறு கலைஞர்கள் சிலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரஞ்சன் மற்றும் எமது கலைக் கூட்டணி என்ற அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு கோரி, ஜனாதிபதியிடம் கடிதம் ஒன்றைக் கையளிக்கவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்க, தற்போது அங்குணு கொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வருகின்றார். (ஓ,4)

## அழிவை நோக்கி ஆட்சியாளர்கள்

### ஆனந்த தேரர் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 27



மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்துள்ள தற்போதைய ஆட்சியாளர்கள், நாளுக்கு நாள் மக்களின் அதிருப்திக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்கள் நிச்சயம் பெரும் அழிவைச் சந்திப்பர் என்று துறவிகள் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், மக்களை இவர்கள் மறந்துள்ளனர். இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காக அதிகளவிலான பௌத்த பிக்குமார் இணைந்து மிகப் பெரிய பங்களிப்பைச் செய்தனர்.

ஆனால் ஆட்சியாளர்கள் தற்போது பிக்குமாரைக் கூட மறந்துவிட்டனர். ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மாத்திரமே அவர்களுக்கு பிக்குமார் தேவைப்படுகின்றனர்.

பௌத்த பிக்குமார் கூறுவதையும், அவர்கள் வழங்கும் ஆலோசனைகளையும் கேட்பதில்லை. இவ்வாறு செயற்பட்டால், மிகப் பெரிய அழிவைச் சந்திப்பர் - என்றார். (ஓ,4)

## பல்கலை நுழைவுக்கான விண்ணப்ப காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 27

2020 /2021 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக நுழைவுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்று ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (ஓ,4)

## இலங்கைக்கு சீனாவின் மற்றுமொரு உதவி

கொழும்பு, ஜூலை 27

இலங்கையில் நவீன விவசாயம் மற்றும் அதி உயர் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு உதவி வழங்குவோம் என்று சீனா அறிவித்துள்ளது.

சீன அதிகாரிகளுக்கும், சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் பாலித ஹோகனவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் வறுமையை ஒழிப்பதற்கு நவீன விவசாயத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியம் தொடர்பில் சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, நவீன விவசாயம் மற்றும் அதி தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஒன்றை ஸ்தாபிப்பதன் ஊடாக அந்த இலக்கை அடைய முடியும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (ஓ,4)

# சிவப்புப் பட்டியலிலிருந்து இலங்கையை நீக்குங்கள்

### பல நாடுகளுடன் பேச்சு

கொழும்பு,ஜூலை 27



**கொரோனாத் தொற்றால் சிவப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள இலங்கையை, அந்தப் பட்டியலில் இருந்து நீக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

குவைத், ஐக்கிய அரபு இராஜ்ஜியம், லாவோஸ், கட்டார், மலேசியா, மியன்மார், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இங்கிலாந்து, போர்த்துக்கல், இத்தாலி, ஜேர்மனி, ஆஸ்திரேலியா, நோர்வே, பஹ்ரேன்,நேபாளம், ஜப்பான், வியட்நாம், பிரான்ஸ், நியூசிலாந்து ஆகிய நாடுகள் இலங்கையை சிவப்புப் பட்டியலில் சேர்த்துள்ளன. இந்த நாடுகளுக்கு இலங்கையில் இருந்து செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனா சட்டதிட்டங்களுக்கு அமைவாக, பல்வேறு பயணக் கட்டுப்பாடுகளை இந்த நாடுகள் விதித்துள்ளன.

இந்தப் பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பில், அந்த நாடுகளைச் சேர்ந்த இலங்கைக்கான தூதுவர்களுடன் அரசு பேச்சு நடத்தி வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளுக்கு தொழில் மற்றும் கல்வி வாய்ப்புக்களுக்காகச் செல்ல எதிர்பார்த்துள்ள, இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு, விதிக்கப்பட்டுள்ள தடைகள் தொடர்பில், சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தொடர்ந்தும் பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெளிநாடு செல்லும் மாணவர்கள் இரண்டு தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மாணவர்கள் வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ,4)



## இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு

### ஸ்டாலின் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 27

தமிழக முகாம்களிலுள்ள இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண, தனி வழிகாட்டுதல் குழுவொன்றை அமைக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முகாம்களிலுள்ள இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குடிதண்ணீர், குடியிருப்பு, கழிவறை வசதி, மாதாந்த பணக்கொடையை உயர்த்தி வழங்குதல், தெருவிளக்கு மற்றும் மின்வசதி, இலவச எரிவாயு இணைப்பு, திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அவர்களின் பிள்ளைகளுக்கு இணைய வழி ஊடாக தமிழைக் கற்பிப்பதற்கு, தமிழ் இணைய கல்விக் கழகம் அமைப்பது உள்ளிட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை வெளிநாட்டு வாழ் தமிழர்களின் அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வெளிநாட்டு வாழ் தமிழர்கள் நலத்துறை என்ற புதிய துறையை உருவாக்க வேண்டும்- என்றார். (ஓ,4)

## கட்டுப்பாடுகளை மீறி திருமண வைபவங்கள்

### வழக்குத் தொடர நடவடிக்கை

கொரோனாக் கால சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறி திருமண நிகழ்வுகளை நடத்துபவர்கள் மற்றும் திருமண மண்டப உரிமையாளர்களுக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதார அதிகாரிகளின் வழிகாட்டுதலுடன் திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கியிருக்கின்றபோதும், அண்மைக்காலமாக இடம்பெற்ற பல திருமண நிகழ்வுகளில் சுகாதார வழிகாட்டல் சட்டம் மீறப்பட்டுள்ளது. கடுமையான சுகாதார வழிகாட்டல் மற்றும் சட்டங்களுடனே திருமண நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் கடந்த சில வாரங்களுக்குள் இடம்பெற்ற திருமண நிகழ்வுகள் சுகாதாரச் சட்டத்தை மீறி இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.


அதனால் நாடுபூராகவும் உள்ள திருமண விழா மண்டபங்களை கண்காணிக்கத் தீர்மானித்துள்ளோம். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் திருமணக் கொத்தணி ஏற்படும் அபாயம் உள்ளது - என்றார். (ஓ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெல்டா தீவிரம்


# மருத்துவமனைகளில் நெருக்கடி ஏற்படலாம்

மருத்துவர்கள் எச்சரிக்கை



**கொழும்பு, ஜூலை 27**
**இலங்கையில் டெல்டா திரிபு வைரஸ் பரவலடைந்துள்ளதால், எதிர்வரும் நாள்களில் மருத்துவமனைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் ஏற்படும் என்று மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.**

துறைசார் நிபுணர்களும் டெல்டா தொடர்பில் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.
இதன்படி எதிர்வரும் ஒருமாத காலத்துக்குள் இந்த வைரஸ் தீவிரமடையும் அபாயமுள்ளது என்று விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
நாட்டில் டெல்டா பரவி வரும் நிலையில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் அறிவுறுத்தியுள்ளார்.
இதனிடையே, நாளாந்தம் அடையாளம் காணப்படுகின்ற கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று நோய்க் கட்டுப்பாடு, ஆரம்ப சுகாதார சேவை இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (ம-4)




## 7 மில்லியன் பேருக்கு இதுவரையில் தடுப்பூசி

கொழும்பு, ஜூலை 27
இலங்கையில் இதுவரை 7 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என்று தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.
அத்துடன் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 57 வீதத்துக்கும் அதிகமானவர்கள் குறைந்தபட்சம் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுள்ளனர்.
அரச தகவல் திணைக்களத்தின் தரவுகளின்படி, மே மாதம் 12ஆம் திகதி அன்று இலங்கையின் தடுப்பூசித் திட்டம் ஒரு மில்லியன் மைல்கல்லை எட்டியது. ஜூன் மாதம் 8ஆம் திகதி 2 மில்லியன் மைல்கல்லை எட்டியது. கடந்த 5ஆம் திகதி 3 மில்லியன் மைல்கல்லை எட்டியது. கடந்த 12ஆம் திகதி 4 மில்லியன் மைல்கல்லை எட்டியது. கடந்த 15ஆம் திகதி 5 மில்லியன் மைல்கல்லை எட்டியது. கடந்த 20ஆம் திகதி அன்று 6 மில்லியன் மைல்கல்லை எட்டியது. கடந்த 24ஆம் திகதி 7 மில்லியன் மைல்கல்லை எட்டியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

World Health Organization

## 124 நாடுகளுக்கு பரவியது டெல்டா

கட்டுப்பாடுகளை நீக்கினால் ஆபத்து
உலக சுகாதார நிறுவனம் எச்சரிப்பு

கொழும்பு, ஜூலை 27
உலகிலுள்ள சுமார் 124 நாடுகளில் டெல்டா வைரஸ் பரவியுள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.
இது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
டெல்டா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை எதிர்வரும் சில வாரங்களில் உலகலாவிய ரீதியில் 200 மில்லியனை விட அதிகரிக்கக்கூடும். எதிர்வரும் காலங்களில் இந்த டெல்டா திரிபு வைரஸ், உலகலாவிய ரீதியில் பரவக்கூடிய பிரதான கொவிட் திரிபாக உருவெடுக்கக்கூடும்.
குறிப்பாக ஐரோப்பா மற்றும் மேற்கு பசுபிக் பிராந்தியத்துக்குள் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் கனிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. சில மேற்குலக நாடுகளில் இறப்புக்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமையால் அங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.
எவ்வாறிருப்பினும் தடுப்பூசி வழங்கும் பணிகள் மந்தமாக முன்னெடுக்கப்படும் நாடுகளில், தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதானது, எதிர்காலத்தில் அபாயமாக அமையக் கூடும்- என்றுள்ளது. (4)

## 1.6 மில்லியன் தடுப்பூசிகளை இன்று அனுப்புகின்றது சீனா



கொழும்பு, ஜூலை 27
சீனாவில் தயாரிக்கப்படும் சைனோஃபோர்ம் தடுப்பூசியின், மேலும் 1.6 மில்லியன் டோஸ்கள் இன்று செவ்வாய்கிழமை நாட்டை வந்தடையவுள்ளன.
இலங்கைக்கு அனுப்பப்படவுள்ள தடுப்பூசிகளைப் பொதியிடும் பணிகள் சீனாவின் பீஜிங் நகரிலுள்ள சர்வதேச விமான நிலையத்தில் இடம்பெற்று வருகின்றன என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.
இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான இரு விமானங்களில் தடுப்பூசிகள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு எடுத்துவரப்படும் என்றும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது. (4)

## மேலும் 90,000 டோஸ் பைசர் இலங்கைக்கு

கொழும்பு, ஜூலை 27
அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட பைசர் தடுப்பூசியின் மேலும் 90 ஆயிரம் டோஸ்கள் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தன. 547 கிலோ கிராம் எடையுள்ள தடுப்பூசிகள், 15 பெட்டிகளில் அடைக்கப்பட்டு, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டன. அதன் பின்னர் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் குளிரூட்டிகள் பொருத்தப்பட்ட வாகனத்தின் மூலமாக, கொழும்பில் உள்ள பிரதான களஞ்சியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டன. (4)


## நான்காவது அலை நாட்டுக்கு அபாயம்



மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை 27
நாட்டில் கொரோனாத் தொற்றின் நான்காவது அலை ஏற்படுமாயின், அதற்கான பிரதான காரணமாக டெல்டா வைரஸே காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த முடியாது பெரும் அபாய நிலைமையை எதிர்கொள்ள நேரிடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக் குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சமூகத்திலுள்ள டெல்டா வைரஸ் தொற்றாளர்கள் சரியாக இனங்காணப்பட வேண்டும். நான்காவது அலை உருவாகுவதையும் தடுக்க வேண்டும்.
அதற்கு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதோடு சுகாதார விதிமுறைகளையும் மிகவும் இறுக்கமாக மக்கள் பின்பற்ற வேண்டும்.
எந்த வகைத் திரிபு வைரஸ்க்களாகக் காணப்பட்டாலும், அவை பரவும் வழிமுறை ஒரே மாதிரியானதாகவே காணப்படும்.
குறிப்பாக கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை விட டெல்டா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு பாதிப்புக்கள் பல மடங்கு அதிகமாகவே காணப்படுகின்றன என்று ஆய்வுகளில் தெரியவந்துள்ளது- என்றார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தடுப்பூசி தாமதிப்பதால் பாதிப்பு எதுவுமில்லை

கொழும்பு, ஜூலை 27
அஸ்ராஜெனகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், தேவையற்ற பயத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.
இந்தத் தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாவது டோஸை செலுத்துவதற்கு 6 மாதங்கள் கால அவகாசம் உள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.
அதனடிப்படையில் இலங்கையில் ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு பின்னரே அஸ்ராஜெனகா தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டது. இதனால் அவர்களுக்குரிய 6 மாதங்கள் கால எல்லை இதுவரையில் நிறைவு பெறவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# கொரோனா அடங்கவில்லை மீண்டும் அபாய நிலைமை!

## சுகாதார பணிப்பாளர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 27
**நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் அதிகரிப்பை காட்டுவதுடன், படிப்படியாக மீண்டும் அச்சுறுத்தலான நிலையொன்றை நோக்கி நகர்கின்றது என்று சுகாதார பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், மருத்துவ நிபுணர்கள் கூறுவதைப் போன்று நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தில் இருந்து தற்போது வரையிலான தரவுகளின்படி, பரவல் உயர்வு நிலையொன்றைக் காட்டுகின்றது. அப்படியென்றால் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றே அர்த்தமாகும். கடந்த காலங்களில் மக்கள் அச்சத்தின் மத்தியில் கட்டுப்பாடுகளுடன் செயற்பட்டனர். ஆனால் தற்போது அந்த நிலையில் இருந்து மக்கள் விடுபட்டு வருகின்றமை இதற்குப் பிரதான காரணமாகும். தற்போது வரையில் அடையாளம் காணப்பட்டு வரும் தொற்றாளர்களில் அதிகமானோர், எந்தவித தடுப்பூசியும் ஏற்றிக்கொள்ளாத நபர்கள் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.
இலங்கையில் பயன்பாட்டில் உள்ள சகல தடுப்பூசிகளும் தரத்தில் சிறந்தவை. ஆகவே மக்கள் விரைவாக தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும்- என்றார். (4)




# சிறுவர்களுக்கு கொரோனா இலகுவில் தொற்றுகின்றது

## கடந்த வாரத்தில் மட்டும் 51 பேர்

கொழும்பு, ஜூலை 27
கொரோனா தொற்றுக்குள்ளான 51 சிறுவர்கள் கடந்த வாரத்தில் மட்டும், கொழும்பில் உள்ள லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று குழந்தை மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.
சிறுவர்களிடையே கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது. அவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படாத காரணத்தால், அவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# சாவ. மருத்துவமனை விடுதியில் 12 தொற்றாளர்கள் அனுமதி



சாவகச்சேரி, ஜூலை 27
சாவகச்சேரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று ஏற்பட்டவர்களுக்கு மருத்துவமனையின் கொரொனா விடுதியில் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.
நேற்றுக் காலைவரை விடுதியில் 12 பேர் அங்கு அனுமதிப்பட்டுள்ளனர் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. மருத்துவமனையில் தொற்று அறிகுறிகளுடன் அனுமதிக்கப்படுவோருக்கு மேற்கொள்ளப்படும், பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனையில் தொற்று ஏற்படுவோரே குறித்த விடுதியில் அனுமதிக்கப்படுகின்றனர். பரிசோதனையில் தொற்றின் வேகம் அதிகம் உள்ளவர்கள் யாழ். மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை எழுமாற்று பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று காணப்படுவோர் சிகிச்சைக்காக கோப்பாய் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். (ப-9)



# கொரோனா வைரஸை பரப்புகிறது எதிர்க்கட்சி

## அரச தரப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 27
இலங்கை மாத்திரமின்றி முழு உலக நாடுகளும் கொரோனாத் தொற்றை எதிர்கொண்டுள்ள நிலையில், மக்களைப் பாதுகாப்பதற்கு பதிலாக, வைரஸை பரப்பிக் கொண்டிருக்கின்றது எதிர்க்கட்சி இவ்வாறு கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் மரியாதைக்குரியதும் சமூக பொறுப்பை நிறைவேற்றுகின்றதுமான ஆசிரிய தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது. எனினும் இந்த விவகாரத்தின் மூலம் எதிர்க்கட்சி அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றது. கீழ்மட்ட சுகாதார விதிமுறைகளைக் கூடப் பின்பற்றாமல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடுசெய்து, நாடளாவிய ரீதியில் கொவிட் வைரஸைப் பரப்பும் செயற்பாடுகளிலும் எதிர்க்கட்சி ஈடுபட்டுள்ளது. குறைந்தபட்ச பொறுப்பைக்கூட அவர்கள் நிறைவேற்றவில்லை. இது தேர்தலை நடத்தும் காலமும் இல்லை. அத்தோடு இந்தச் சந்தர்ப்பம் அரசியல் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்றிக்கொள்வதற்கானதும் அல்ல- என்றார். (4)

# ஆசிரியர்களின் போராட்டங்களால் இன்னுமொரு கொத்தணி ஏற்படும்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27
சில தொழிற்சங்கங்கள் ஆசிரியர்களைப் போராட்டங்களுக்கு பயன்படுத்துவதால், கொரோனாத் தொற்றுப் பரவல் மேலும் அதிகரிக்கும். இதனால் இன்னொரு கொரோனாக் கொத்தணி உருவாகும் அபாயம் உள்ளது என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்னா ஜெயசுமன தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது டெல்டா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நேரத்தில் ஆசிரியர்கள் ஒன்றுகூடுவது மிகவும் ஆபத்தானது. எதிர்காலத்தில் ஆசிரியர்கள் மூலம் ஒரு கொத்தணி உருவாக வாய்ப்புள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# தனிமைப்படுத்தலிலிருந்து 6 பிரிவுகள் விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 27
நாட்டில் 5 மாவட்டங்களைச் சேர்ந்த ஆறு கிராம சேவகர் பிரிவுகளில், நடைமுறையிலிருந்த தனிமைப்படுத்தல் உத்தரவு நேற்றுக் காலையுடன் தளர்த்தப்பட்டுள்ளது.
அதற்கமைவாக கேகாலை, காலி, முல்லைத்தீவு, இரத்தினபுரி மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆறு கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று கொவிட் 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானை அமெரிக்கா நிச்சயம் பாதுகாக்கும்!

## பைடன், அஸ்ரப் கனி பேச்சு

**காபூல், ஜூலை 27**

**அமெரிக்கப் படைகள் நிச்சயம் ஆப்கானிஸ்தானைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என்று ஆப்கானிஸ்தானின் அதிபர் அஸ்ரப் கனி தெரிவித்தார்.**

ஆப்கானிஸ்தானில் கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்கத் தலையீட்டால் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டது தலிபான். இதையடுத்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசு அமைக்கப்பட்டது. அமெரிக்கப் படைகளின் ஆதரவுடனும் பாதுகாப்புடனும் ஆப்கானிஸ்தான் அரசு ஆட்சிய மைத்தது. எனினும் தலிபான்களை அழிக்க ஆப்கானிஸ்தானாலோ அல்லது அமெரிக்காவாலோ முடியவில்லை. இதையடுத்து தலிபான்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்ட அமெரிக்கா தனது படைகளை தாயகம் திருப்புகின்றது.



ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த 95 வீதமான அமெரிக்கப் படைகள் தாயகம் திரும்பியதை அடுத்து அங்கு தலிபான்களின் தாக்குதல் தீவிரமாகியுள்ளது. இதையடுத்து ஆப்கானிஸ்தான் அதிபர் அஸ்ரப் கனி மற்றும் அமெரிக்க அதிபர் பைடன் ஆகியோர் பேச்சு நடத்தியுள்ளனர். இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கனி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிபர் ஜோ பைடனுடனான உரையாடலில் இரு நாடுகளுக்கும் இடையிலான வளர்ந்து வரும் தொடர்ச்சியான உறவைப்பற்றி நாங்கள் விவாதித்தோம். ஆப்கானிஸ்தான் ராணுவத்துக்கு ஆதரவு தொடரும் என அதிபர் ஜோ பைடன் எனக்கு உறுதியளித்தார். அவர்கள் ஆப்கானிஸ்தானை பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது - என்றார். (ம)



## சீனாவில் மீண்டும் கொரோனா பரவல்

பீஜிங், ஜூலை 27

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் மீண்டும் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.

இதுகுறித்து சீன ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில், 'சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் கொரோனா பரவல் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. தலைநகர் நன்ஜிங்கில் ஒரே நாளில் 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே மாகாண அரசு, பெருந்திரளாகப் பரிசோதனைகளை நடத்தி வருகிறது - என்றுள்ளது. (ம)



## உலகம் முழுவதும் டெல்டா பரவியது!

லண்டன், ஜூலை 27

உலகம் முழுவதும் கொரோனா நோயாளிகளிடம் இருந்து சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கொரோனா மாதிரிகளில் 75 வீதத்துக்கும் மேற்பட்ட இடங்களில் கொரோனா பரவியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தியா, சீனா, ரஷ்யா, இஸ்ரேல், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் அண்மைக்காலமாக கொரோனா மற்றொரு அலையாக உருவெடுக்க எத்தனிக்கின்றது. அந்த நாடுகளிலும் இன்னும் பல நாடுகளில் இருந்தும் கடந்த 4 வாரங்களாக கொரோனா நோயாளிகளிடம் இருந்து மாதிரிகள் சேர்க்கப்பட்டன. இந்த மாதிரிகளில் 75 சதவீதத்துக்கும் அதிகமான மாதிரிகளில் டெல்டா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது மிகவும் ஆபத்தான நிலை. எனவே உலக நாடுகளில் நிலைமையில் தீவிரத்தை உணர்ந்து தடுப்பூசி ஏற்றலைத் துரிதப்படுத்த வேண்டும் என்றார். (ம)

## வான் தாக்குதலில் 30 தலிபான் சாவு!

காபூல், ஜூலை 27

ஆப்கானிஸ்தானில் இரு பகுதிகளில் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 30 தலிபான்கள் உயிரிழந்தனர் என்று ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு ஜாவ்சான் பகுதியைச் சேர்ந்த முர்காப் மற்றும் ஹாசன் தப்பின் கிராமத்தில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகளை சுற்றிவளைத்த ராணுவம் வான்வழித் தாக்குலைத் தொடர்ந்தது. இதில் 30 பயங்கரவாதிகள் பலியானார்கள். மேலும் 15 பேர் படுகாயம் அடைந்தனர். இதில் தலிபான்கள் பயன்படுத்திய ஆறு இரு சக்கர வாகனங்கள், இரண்டு பதுங்கு குழிகள் என்பனவும் அழிக்கப்பட்டன. (ம)





ஹெய்ட்டி ஜனாதிபதி மொய்ஸ் கடந்த 6ஆம் திகதி, ஹெய்ட்டி தலைநகர் போர்ட் அவு பிரின்ஸிலுள்ள அவரது தனிப்பட்ட இல்லத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவரின் இறுதிச் சடங்குகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. (ம)

### பெகாசஸ் சர்ச்சை

## தொலைபேசியை மாற்றிய மக்ரோன்

பாரிஸ், ஜூலை 27

பெகாசஸ் சர்ச்சைகளுக்கு இடையே பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் தனது தொலைபேசியையும், எண்ணையும் மாற்றியுள்ளார் என்று தகவல் வெளிவந்துள்ளது.



இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ நிறுவனத்தின் பெகாசஸ் மென்பொருள் மூலம், உலகம் முழுவதும் உள்ள மனித உரிமைப் போராளிகள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரின் செல்போன் தகவல்கள் திருடப்பட்டன என்று தகவல் வெளியானது. இந்தச் செய்தி உலக நாடுகளுக்கிடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. மேலும், உலகம் முழுவதும் உள்ள பத்திரிகையாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் தங்கள் தனிமனித சுதந்திரம் பறிக்கப்படுவதாகக் குரல் எழுப்பி வருகின்றனர். இந்த நிலையில் பாதுகாப்புக் காரணங்களுக்காக பிரான்ஸ் அதிபர் இம்மனுவல் மக்ரோன் தனது தொலைபேசியையும், எண்ணையும் மாற்றியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**தாமரை இலைமேல் தங்கியிருக்கும் நீர்க் குமிழிகளுக்கு ஒப்பானது எம் நாழ்க்கை எந்த நிமிடமும் முடிந்து போகலாம்**

உதிர்காலம் என்பது...
சருகுகளின் குவியல்
அல்ல..
உயிர்த்தலுக்கான
அடிப்படைகளை
சரிபார்த்தல்..

# எங்கள் திருமணம் ஆண்டவன் கையில்!

- பவர் ஸ்டார்



சமீபத்தில் நடிகர் பவர் ஸ்டார் சீனிவாசன் வனிதா விஜயகுமாருடன் திருமணக் கோலத்திலிருந்த புகைப்படம் வைரலானது. இந்நிலையில் இது படப்பிடிப்புக்காக எடுக்கப்பட்ட படம் என்று வனிதா தெரிவித்துள்ளார்.

இது குறித்து நடிகர் பவர் ஸ்டார் தெரிவிக்கையில்,

"ஒரு போஸ்டர் வைரலாக பரவியிருக்கிறது. சம்பளமே வாங்காமல் இதில் நடித்து வருகிறேன். கல்யாணம் ஆவதெல்லாம் கடவுள் கையில்தான் உள்ளது. எனக்கும், வனிதாவுக்கும் திருமணம் ஆவதும் ஆண்டவன் கையில்தான் உள்ளது. நடிகர் - நடிகை என்ற முறையில் தான் அந்த புகைப்படம் வெளியிடப்பட்டது.

பலரின் வாழ்த்து உண்மையானால், அது மகிழ்ச்சியே. எனது லத்திகா படம் 350 நாட்கள் ஓடியது. அதுபோல், இந்த படத்தையும் 300 நாள் ஓடவைப்போம்." என்று தெரிவித்துள்ளார்.









# இன்றைய நாள்

**மேடம்:** புதிய முயற்சிகளில் தாமதமான வெற்றி கிடைக்கும். இடமாற்றத்துக்கான வாய்ப்புகள் இப்போதைக்கு இல்லை. பணியிடத்தில் பணிவாக இருப்பதால் நற்பெயர் கிடைக்கும்.

**இடபம்:** மனதிற்கு இனிய சம்பவம் நடக்கலாம். குடும்பத்தினரால் பெருமை சேரும். இழந்த நட்பு ஒன்றைப் புதுப்பித்துக் கொள்வீர்கள். செயல் திறன் கூடும்.

**மிதுனம்:** உறவினரிடையே இருந்த சர்ச்சை சாதகமாக முடியும். தந்தை நலம் பெறுவார். பழைய தொல்லைகள் தீரும். பிள்ளைகளால் நிம்மதியடைவீர்கள்.

**கடகம்:** புதிய தொழில்/ பணி வாய்ப்பு கிடைத்தால் யோசித்து முடிவெடுங்கள். பிரச்னையில் சிக்கும் செய்கையை யார் தூண்டினாலும் விலகியிருங்கள்.

**சிம்மம்:** நல்லவர்களின் நட்பால் ஆதாயமடைவீர்கள். மனதில் காதல் பிறக்கும். தேவையில்லாத விஷயங்களை நினைத்துக் குழப்பம் அடையாதிருங்கள். உங்கள் மீது இருந்த வருத்தம் நீங்கும்.

**கன்னி:** அலுவலகத்தில் உங்களை நம்பி முக்கியபொறுப்புகளை ஒப்படைப்பார்கள். தேவை ஏற்படும் நண்பருக்கு உதவிக்கரம் நீட்டி நெகிழ வைப்பீர்கள்.

**துலாம்:** சம்பளம் உயரும். குடும்ப ஒற்றுமை மகிழ்ச்சி தரும். மனம் நிறைவடையும். பிரிந்த உறவினரைச் சந்தித்து மகிழ்வீர்கள். நியாயமான தைரியம் கூடும்.

**விருச்சிகம்:** நட்பு சிறப்பாக அமையும். பாராட்டுப் பெறுவீர்கள். முன்னேற்றம் வரும். சமூக அந்தஸ்து உயரும். பல நாள் கழித்து நண்பர் தொடர்பு கொள்வார்.

**தனுசு:** உடல்நலக் கோளாறுகள் நீங்கும். செலவுகள் குறைந்து நிம்மதி வரும். சிக்கனத்தைக் கடைப்பிடித்தால் எதிர்கால நன்மைக்கு வழியாகும்.

**மகரம்:** எடுத்த விஷயத்தில் முயற்சியுடன் முன்னேறுவீர்கள். பணியிடத்து சூட்சுமங்களை அறிவீர்கள். நிம்மதியான நாள். பேசும்போது அறிவாற்றல் வெளிப்படும்.

**கும்பம்:** புதிய நட்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டாம். குடும்பத்தில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் முற்றிலும் குணமடைவார்.

**மீனம்:** யாரையும் அதிகம் நம்பாதீர்கள். வீண் பொழுது போக்குகள் அதிகரிக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுங்கள். சகோதரருக்கு உதவுவீர்கள்.

# விலைமதிக்க முடியாத நகை புன்னகை

ஒரு சிறு புன்னகை ஒருவரின் நாளையே சிறப்பாக மாற்ற முடியுமானால், அந்த புன்னகையை உதிர்ப்பதில் தவறேதும் இல்லையே.

சில பேர் இருக்கின்றனர்... காலை எழுந்ததில் இருந்து இரவு படுக்கைக்கு செல்லும் வரையில் மற்றவர்களிடம் 'சிடு சிடு' என இருப்பர். அப்படிப்பட்டவர்களுக்கு புன்னகைக்க தெரியாமலில்லை. புன்னகைக்க விருப்பமில்லை. எப்பொழுதும் முகத்தில் ஒரு மேட்டிமைத்தன்மை இருக்கவேண்டும்... மற்றவர்களைப் பார்த்து புன்னகைத்தால் நமது தகுதி குறைந்துவிடும் என யோசிப்பவர்கள் இருக்கத்தான் செய்கின்றனர். அப்படியானவர்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், சிரிப்பது மற்றவர்களுக்காக அல்ல,.. முதலில் சிரிப்பவருக்கே நல்லது.



அழுகை, கோபம், வியப்பு என்பவற்றைப் போல் சிரிப்பும் ஓர் உணர்ச்சி. அழுகை, கோபத்தை கூட எந்நேரமும் எம்மால் வெளிப்படுத்த முடியாது. ஆனால், சிரிப்பை எப்பொழுதும் முகத்தில் தக்கவைத்துக் கொள்ளலாம். முகத்தில் புன்னகையுடன் இருப்பவர்களை களையான முகத்தோற்றம் உடையவர்கள் என்று வர்ணிக்கின்றோம். ஆனால், அதையே நாம் கடைபிடிக்க தவறிவிடுகின்றோம். உலகத்திலேயே விலைமதிக்க முடியாத நகை புன்னகைதான். அதை இலவசமாக நாம் பெற்றுள்ளோம். அதை பரிமாறிக்கொள்ள பழகுவோம். நாளைய நாள் என்பது நிச்சயமற்றதுதான். இன்றைய நாளில் சிரித்து மகிழ்ந்து உடன் இருப்பவர்களையும் சந்தோஷப்படுத்தி, வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்க முயற்சிப்போம்.

பிறக்கும்போது அழுகிறோம். இறக்கும்போது சுற்றியிருப்பவர்கள் எமக்காக அழுவார்கள். இடையில் வாழும் கொஞ்ச நாளிலாவது சிரிப்பை மற்றவர்களுக்கு அள்ளிக்கொடுப்போம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பலசாலி?



பாம்பு ஒன்று புற்றில் வாழ்ந்து வந்தது.

அதற்கு ரொம்ப நாட்களாக தன்னுடைய இனத்தார் பெரிய மிருகங்களை கூட அப்படியே விழுங்கி விடுவதால், தாங்கள்தான் பலசாலி என்று நினைத்திருந்தது.

இருந்தாலும், இதை சோதித்து பார்க்க எண்ணி, புற்றை விட்டு வெளியே வந்தது. அப்போது அங்கு ஒரு கீரி வரவே, பாம்பு பயத்துடன் மறைந்துக் கொண்டு, ""ஆகா! கீரிதான் பலசாலி" என்று நினைத்துக் கொண்டது.அச்சமயம் அங்கு வந்த பூனை, கீரியை விரட்டியது.

அதைப் பார்த்ததும், "பூனைத்தான் பலசாலி' என்று எண்ணியது பாம்பு.அந்தப் பூனையை ஒரு நாய் விரட்டத் தொடங்கியது. அதைக் கண்டதும், ""பூனையை விரட்டுகிற நாய்தான் பலசாலி' என்று நினைத்தது பாம்பு.

பூனையை விரட்டிக் கொண்டு ஓடிய நாய், ஒரு மனிதன் செய்து கொண்டிருந்த பச்சைப் பானையில் விழுந்தது. அதைக் கண்டு கோபம் அடைந்த மனிதன், நாயைத் தடியால் அடித்தான்.நாய் அலறிக் கொண்டு ஓடியது.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த பாம்பு, "நாயை விட மனிதன்தான் பலசாலி" என்று எண்ணிக் கொண்டே மறைவை விட்டு வெளியே வந்தது.மனிதன் அதைக் கண்டதும்,"ஐயோ பாம்பு!" என்று அலறிக் கொண்டு ஓடினான்.அந்தக் காட்சியை கண்ட பாம்பு, "இந்த உலகில் எல்லாரையும் விட நான்தான் பலசாலி' என்று எண்ணிக் கொண்டது.

அப்போதுதான் முன்பு பார்த்த கீரி மீண்டும் அங்கே வரவே, "அய்யோ... அம்மா!' என்று அலறிக்கொண்டு ஓட்டம் எடுத்தது பாம்பு. இந்த உலகில் ஒவ்வொருவரும் தான் தான் பெரியவர் என்று நினைத்துகொள்ளக் கூடாது என்பதற்காகவே."ஒவ்வொருவருக்கும் ஒரு எதிரியை கடவுள் படைத்துள்ளார்

# விலங்குகளுக்கு நினைவாற்றல் உண்டா?



விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் நினைவாற்றல் உண்டு. குறுகிய கால நினைவாற்றல், தனித்துவமான நினைவாற்றல் என்ற இரு வகை நினைவாற்றல்கள் அவற்றுக்கு உண்டு.

பார்க்கும் அனைத்தையும் குறுகிய காலம் மட்டுமே நினைவில் வைத்துக்கொண்டு, பிறகு மறந்துவிடுகின்றன. சக விலங்குகள், உணவு நிறைந்த இடங்கள், நச்சுணவு, எதிரி போன்ற விஷயங்களைத் தனித்துவமான நினைவாற்றலில் சேமித்துக்கொள்கின்றன.

விலங்குகளுக்குத் தங்கும் இடம், பறவைகளுக்குக் கூடுகள் போன்றவை எல்லாம் இந்தத் தனித்துவமான, நீண்ட கால நினைவாற்றல் மூலமே நினைவில் வைத்துக்கொள்கின்றன. டொல்பின், யானை, நாய், குரங்கு, கிளி போன்றவற்றுக்கு நினைவாற்றல் அதிகம் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்,

# முதலாம் உலகப் போர்



முதலாம் உலகப் போர் 1914ம் ஆண்டு ஜூலை 28 முதல் 1918ம் ஆண்டு நவம்பர் 11ம் தேதி வரை நடைபெற்றது.

30 நாடுகளைச் சேர்ந்த சுமார் 6.50 கோடி பேர் முதலாம் உலகப் போரில் பங்கேற்றனர். இதில் 1 கோடி பேர் உயிரிழந்தனர்.

இந்தப் போரில் பீரங்கி பொருத்தப்பட்ட டாங்கிகளை ஆண் டாங்கிகள் என்றும், இயந்திரத் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட டாங்கிகளை பெண் டாங்கிகள் என்றும் அழைத்தனர்.

முதலாம் உலகப் போரின்போது ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு தகவல்களை அனுப்ப, ராணுவ வீரர்கள் நாய்களையும், புறாக்களையும் பயன்படுத்தினர்.


முதலாம் உலகப் போரில் அமெரிக்காவுக்கு 30 பில்லியன் டொலர்கள் செலவானது.

முதலாம் உலகப் போருக்குப் பிறகு ஆஸ்ட்ரோ ஹங்கேரியன், ஜெர்மன், ரஷ்யன் மற்றும் ஒட்டோமன் சாம்ராஜ்யங்கள் பெரும் சரிவைச் சந்தித்தன.

முதலாம் உலகப் போரில் மிகப்பெரிய ராணுவத்தைக் கொண்ட நாடாக ரஷ்யா இருந்தது. அந்நாட்டுப் படையில் 12 மில்லியன் வீரர்கள் இருந்தனர்.

முதலாம் உலகப் போருக்குப் பிறகுதான் அமெரிக்கா, மிகப் பெரிய ராணுவ வல்லரசாக மாறியது. இப்போருக்குப் பிறகு இங்கிலாந்தின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அந்நாடு கடன் வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

# வித்தியாசங்களை கண்டுபிடிப்போம்



# மின்னல் தாக்கமும் பாதுகாப்பும்



புவியிலே தொடர்ந்து நிகழ்ந்து வருகின்ற காலநிலையின் குழப்பமான நிலைமைகள் காரணமாக தற்போது மின்னலின் தாக்கமும் அதிகரித்து வருகின்றது. ஒரே தடவையில் பலத்த பாதிப்பை ஏற்படுத்து, புவிநடுக்கம், வெள்ளப்பெருக்கு போலல்லாமல், சிறு சிறு பாதிப்புக்களை அடிக்கடி ஏற்படுத்துகின்ற ஓர் இயற்கை அனர்த்தமாக மின்னல் தாக்கம் (Lightning) காணப்படுகின்றது.

மின்னல் தாக்கமானது மழைக்காலங்களில் பெருமளவில் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வாகும். இலங்கையைப் பொறுத்தவரை மார்ச், ஏப்ரல், ஒக்டோபர், நவம்பர் ஆகிய மாதங்களில் மின்னல் தாக்கம் இடம்பெறுகின்றது. அதுவும் குறிப்பாக மேற்காவுகை மழை , சூறாவளி மழை நிகழும் காலப்பகுதிகளில் இவற்றின் தாக்கம் அதிகமாகக் காணப்படும்.

நேரடிமின்னல் தாக்கம் உயரமான இடங்களில் அல்லது திறந்த வெளிகளில் இருக்கும் மனிதர்களையும் கட்டடங்களையும் நேரடியாக மின்னல் தாக்குவதனை நேரடி மின்னல் தாக்கம் என அழைக்கின்றனர். இடிமின்னல் வேளைகளில் தொலைபேசிக் கோபுரங்கள், உலோகக் கொடிக்கம்பங்கள், திறந்த ஒதுக்கிடங்கள் என்பவற்றின் அருகாமையில் நிற்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். உயரமான மரங்களுக்கு கீழ் ஒதுங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில் மரங்களை நோக்கி இலகுவில் மின்னல் கடத்தப்படக்கூடியது ஆகும்.

வீட்டிலுள்ள மின்தொடர்புகள், அண்டனா தொடர்புகளைத் துண்டித்தல் வேண்டும். தொலைக்காட்சிகள், கணனிகள், மற்றும் குளிர்சாதனப் பெட்டிகள் என்பவற்றை மின் இணைப்பிலிருந்து துண்டிக்கவேண்டும். இல்லையெனில் அவை உயர் மின்சார தாக்கத்தினால் பழுதடைந்துவிடும்.


# கண்டுபிடிப்புகளும் விஞ்ஞானிகளும்



மின்பல்பு கண்டுபிடித்தவர். தாமஸ் ஆல்வா எடிசன்



தொலைபேசி கண்டுபிடித்தவர். கிரகாம்பெல்



ரேடியோ கண்டுபிடித்தவர். மார்கோனி



கார் கண்டுபிடித்தவர். கார்ல் பென்ஸ்



தொலைகாட்சி கண்டுபிடித்தவர். J. L. பெயர்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளபாடங்களின் பெறுகைக்கான அழைப்பு - 2021
## வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்
## NP/41/20/1/3/PROC/2021/19

1. யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான கீழ்வரும் விபரப்படியான தளபாடங்கள் தேவைப்படுவதால் பிராந்திய பெறுகைக்குழு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைக் கோரு கின்றது.

| பெறுகை இலக்கம் | பெறுகை தலைப்பு | அச்சிடலுக்கான விபரங்கள் |
|---|---|---|
| NP/41/20/1/3/PROC/2021/19 | தளபாடங்களுக்கான பெறுகை | மாணவர்களுக்கான தளபாடங்கள் |
| | | ஆசிரியர்களுக்கான தளபாடங்கள் |
| | | விஞ்ஞான ஆய்வு கூட தளபாடங்கள் |
| | | ஏனைய தளபாடங்கள் |

2. பெறுகைகள் அனைத்தும் தேசிய போட்டி விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
3. தகுதியான கேள்விதாரர், தற்பொழுதும் செல்லுபடியாகவுள்ள வடக்கு மாகாணத்திற்குட்பட்ட தளபாடங்களுக்கான வியாபாரச் சான்றிதழுடன், கறுப்புப் பட்டியலில் தமது பெயர் உட்படாதவராக இருத்தல் வேண்டும். அத்துடன் கேள்வி தாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் தொழில் நிறுவனத்தினை / கிளையினைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் பெறுகை உள்ளடக்கம் பகுதி II இல் கூறப்பட்ட தகைமைகளினை நிறைவுசெய்திருத்தல் வேண்டும்.
5. வழங்குனர்கள் அலுவலகத்தில் கிடைக்கும் கேள்வி ஆவணத்திற்கான விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 500/= வினை அலுவலக நாட்களில் 27.07.2021 தொடக்கம் 13.08.2021ம் திகதி வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. இது தொடர்பான பெறுகை முன்னறிவிப்பு கூட்டம் (Pre bid meeting) 09.08.2021ம் திகதி 10.00 மணிக்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் மாநாட்டு அறையில் இடம்பெறும்.
7. மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் கணக்காளர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம் - 021-222 2647 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
8. விலைக் கேள்விகள் 16.08.2021ம் திகதி 10.00 மணிக்கு முன்பதாக வலயக் கல்வி அலுவலக கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
9. கூறுவிலை சமர்ப்பித்தல் திகதியில் நாட்டில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலையால் அரசாங்க அறிவித்தலின் பிரகாரம் அலுவலகம் மூடப்பட்டிருப்பின் அடுத்துவரும் அலுவலக நாளில் குறித்த நேரத்தில் சகல விடயங்களும் அமுலில் இருக்கக்கூடியவாறு நடைமுறைப்படுத்தப்படும்.
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளர்களுக் கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகை குழுவின் தலைவருக்கு பூரண அதிகாரமுள்ளது.

**பெயர்** :- மு.இராதாகிருஷ்ணன்
**பதவி** :- தலைவர்/வலயக் கல்விப் பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழு
**முகவரி** :- வலயக் கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம், செம்மணி வீதி, நல்லூர்
**தொலைபேசி** :- 021-2222647 **தொலைநகல்** :- 021-2222647
**மின்னஞ்சல்** : acctjaf@gmail.com

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியையான
திருமதி உஷானந்தி பகீரதன்
அவர்களின் அன்புத் தந்தை
**சிவஞானசுந்தரம் தர்மசேகரம்**
அவர்களின் மறைவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி**

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் தலைவர் **திருநாவுக்கரசு சுந்தரலிங்கம்** அவர்களின் சகோதரி
**செல்வி**
**அமிர்தவதி திருநாவுக்கரசு**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அமரரின் ஆத்மா சாந்தி யடைய பிரார்த்திக்கின்றோம்.

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்**
**இல.12, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பணிப்பாளர்கள்,**
**பணியாளர்கள்,**
**யாழ்ப்பாணம் மாவட்ட**
**கூட்டுறவுச் சபை.**

## கண்ணீர் அஞ்சலி




எமது வங்கிக் கிளையின்
உத்தியோகத்தர்
**திருமதி கணேசன் தயாளினி**
அவர்களின் அன்புத் தாயார்
**சிவபாதம் இராஜேஸ்வரி**
அவர்களின் மரண செய்தி
அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

**முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்**
**தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலிக் கிளை**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
12 • 06 • 1991



**மறைவு**
24 • 07 • 2021

# சிவகுமார் விஸ்ணுகாந்தன்

யாழ்ப்பாணம் பன்னாலையைப் பிறப்பிடமாகவும் அவுஸ் ரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமார் விஸ்ணுகாந்தன் கடந்த 24.07.2021 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சிவகுமார் - நகுலேஸ்வரி (அவுஸ்ரேலியா) தம்பதியரின் அன்பு மகனும், சரண்யா, நிரோஜன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராதிகா வின் அன்புக் கணவரும், கவின், லவிசா ஆகியேரின் அன்புச் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவுஸ்ரேலியாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தரு கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
01 • 10 • 1950



**மறைவு**
26 • 07 • 2021

# காங்கேசு புவனேஸ்வரி

கிளாலை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் இல. 62 / 1, கதிரமலை வீதி, சுன்னாகத்தை வசிப் பிடமாகவும் கொண்ட காங்கேசு புவனேஸ்வரி நேற்று (26.07.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற காங்கேசுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராயேஸ்வரி, சிவனேஸ்வரி, பரமேஸ்வரி மற்றும் தேவராசா ஆகியோரின் சகோதரியும், சுதாகர், சுகிதா, சுவாஸ்கர், சுபாஸ்கர் (பொறியியலாளர் - லண்டன்), சுஜாத்தா (பண்ணை முகாமையாளர் - மாவட்ட விவசாய பயிற்சி நிலையம் - திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயும், கவிதா, சுகுமார், சுஜாதா, கிருஸ்ணவேணி நவநீதன் (விரிவுரையாளர் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், திசாணா, யிவிகா, சனோஜா, கோபிகன், தனுயன், தரங்கினி, கிருஸ்னப்பிரியன், அபிரா, அனிக்கா, சாகித்யன், அக்ஷயன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.07.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 62/2, கதிரமலை வீதி,**
**சுன்னாகம்.**

**தகவல் :**
**பிள்ளைகள்**

**077 234 9943 / 077 161 7563**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 11 . 1950



மறைவு
25 . 07 . 2021

# சின்னர் கணபதிப்பிள்ளை

வரணி .இயற்றாலை, வரணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் கணபதிப் பிள்ளை (ரூ போட்டி) அவர்கள் 25.07.2021 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தர் (சடாசிவம்) - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், மீனாட்சிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், முருகேசு, கந்தசாமி, சுப்பிரமணியம் (லண்டன்), பஞ்சலிங்கம், தியாகராசா (லண்டன்), பாலசிங்கம் (லண்டன்), அருந்தவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலரதி (லண்டன்), காந்தரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவசீலன், (லண்டன்), அனுஷா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், மிருஷிகன், தருணிகா அஸ்வின், அபிஸ்க்கா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இயற்றாலை,**
**வரணி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 07 . 1936



மறைவு
26 . 07 . 2021

# திருமதி மயில்வாகனம் மாணிக்கம்

தென்மராட்சி மீசாலை சோலையம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கரைச்சி புளியம் பொக்கணை கலவெட்டித்திடல் கீதா பவனத்தை வாழ்விடமாகவும் கொண்ட **திருமதி மயில்வாகனம் மாணிக்கம்** அவர்கள் நேற்று (26-07-2021) திங்கட்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற பெரியமயில்வாகனம் அவர்களின் பாசமிகு துணைவியாரும் காலஞ் சென்றவர்களான நாராயணபிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரந்தன் உடையார் சபாபதிப்பிள்ளை அவர்களின் பெறாமகளும் காலஞ்சென்ற செட்டியார் கந்தையா, காலஞ் சென்ற சிதம்பரம் (மாதாப் பேத்தி) தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ் சென்ற சின்னப்பிள்ளை, மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேலாயுதபிள்ளை (ஓய்வு நிலை அஞ்சல் அதிபர்), சிறிஸ்கந்தராசா (தேவன்), சோமசேகரம் ( கரன், அஞ்சலர் - கண்டாவளை), சுயராணி (ராணி - பிரான்ஸ்), லிங்கேஸ்வரன் (ராசன்- பிரான்ஸ்), துரைராசசிங்கம் (துரை - பிரான்ஸ்), தேவநாயகி (கீதா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாராயணபிள்ளை, நாகபூரணி, அன்னம்மா, சந்திராதேவி, திருநாவுக்கரசு ஆகியோரின் சிறிய தாயாரும் கமலமணி (ஓய்வு நிலை உத்தியோகத்தர் - கமநலச் சேவைகள் திணைக்களம்), மேனகாதேவி (மேனகா), நந்தினி (தேவி), ஜெயரூபி (பிரான்ஸ்), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் (ஐஸ்கிறீம்), உதயச்செல்வி (உதயா - பிரான்ஸ்), ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரதீசன் (கனடா), முரளீசன் (ஆசிரியர் - ஆசிரிய பயிற்சிக் கலாசாலை - மட்டக்களப்பு), சுபிதா, நயனீசன், நிருஜா (ஆசிரியை - முருகானந்தா மத்திய கல்லூரி - முரசுமோட்டை), தட்சணன் (லண்டன்), தரணியா, வர்ணன் (பிரான்ஸ்), வினோதினி (பிரான்ஸ்), விந்துசன் (குட்டி - பிரான்ஸ்), மதுலா (பிரான்ஸ்), மிதுலா (பிரான்ஸ்), அட்சயன் (பிரான்ஸ்), கரோலின் (பிரான்ஸ்), சுபோதினி (பிரான்ஸ்), தமிந்தினி, தமிந்தன் அகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் தமிழீழன் (கனடா), தமிழாளன் (கனடா), தமிழாரன் (கனடா), வரிஸ் (பிரான்ஸ்), விஸ்வா (பிரான்ஸ்), னோகா (பிரான்ஸ்), நித்தீஸ் (பிரான்ஸ்), விகான் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியாரும் அமரர் சின்னத் தங்கம் அமரர் நாகலிங்கம் வயிரமுத்து (ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, அன்னம்மா பராசக்தி (ஓய்வு நிலை அதிபர்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-07-2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணிக்கு கலவெட்டிதிடல் நெடுமோட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
**குடும்பத்தினர்**

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை


வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2019/2020 (வெளிவாரி)
புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2021 (11ம் பிரிவு)

மேற்படி குறித்த பட்டப்படிப்பிற்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கான தெரிவுப் பரீட்சையானது எதிர்வரும் 08.08.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி தொடக்கம் 11.30 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதோர் 04.08.2021 (புதன்கிழமை) மற்றும் 05.08.2021 (வியாழக்கிழமை) ஆகிய நாட்களில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ (021-222-3612) தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**26.07.2021**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
### கந்தன் - ஆறுப்பிள்ளை


| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05-01-1950 | 27-06-2021 |

கடந்த (27-06-2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வத்தின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று முன்தினம் புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. இன்று (27-07-2021) செவ்வாய்க்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதிய போசன விருந்து உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 - 04 - 1963



மறைவு
26 - 07 - 2021

# அண்ணாமலை இரத்தினசிங்கம்

இடைக்குறிச்சி கிழக்கு வரணியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **அண்ணாமலை இரத்தினசிங்கம்** நேற்று (26-07-2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - சிவயோகேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மகனும் ஞானப்பிரகாசம் - அரசம்மா தம்பதியினரின் மருமகனும் தவயோகமலரின் (தேவி) அன்புக் கணவரும் திவாரகா (ஜேர்மனி), சாருஜன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேந்திரன் (ஜேர்மனி), ஐஸ்வரியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆனந்தமகேஸ்வரி, இரத்தின சோதி, விசியகுமார், மோகனராஸ், யோகநாதன் (பிரான்ஸ்), குமுதினி (லண்டன்), குமுதன் (பிரான்ஸ்), முகுந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுருதியின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-07-2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கொடிக்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் நள்ளிரவில் 300 பேருக்குப் பி.சி.ஆர்

## சுகாதாரப் பிரிவினரின் அதிரடி நடவடிக்கைக்கு மக்கள் பாராட்டு

வவுனியா, ஜுலை 27

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பிரிவினர் இரவு, பகல் பராது செயற்பட்டு வருகின்றனர். அந்த வகையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணி தொடக்கம் அதிகாலை 5.30 மணி வரையான காலப்பகுதியில் மூன்று முறிப்பு (வவுனியா வரவேற்பு வழைவுக்கு அருகே) பகுதியில் ஏ9 வீதியூடாக வாகனங்களில் பயணிப்போருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. டெல்டா வைரஸ் தாக்கம் நாடளாவிய ரீதியில் அதிகரித்து வருவதை அடுத்து அதனை கட்டுப்படுத்துவதற்காக வியாபார நோக்கம், அலுலக தேவை போன்றவற்றுக்காக வவுனியா மாவட்டத்தினுள் நுழையும் வாகனங்களில் பயணிப்போர் மற்றும் வவுனியா ஊடாக ஏனைய மாகாணங்களுக்குச் செல்பவர்கள் என 300க்கும் மேற்பட்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

சுகாதாரத்துறை யினரின் இந்த நடவடிக்கைக்கு மக்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ப-18)




**காணி விற்பனைக்கு**

புதிய செம்மணி வீதி ஞானவைரவர் கோவிலுக்கு அருகாமையில் காணியுடன் வீடு ஒன்று விற்பனைக்கு உள்ளது.
மேலதிக தொடர்புக்கு:
077 428 6189,077 136 8094



வீடுகளுக்கு வந்து
**கூலி வேலை** செய்து தரப்படும்
தொடர்பு: 074 137 5206



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



திருமதி
ஸ்ரீரதி
முருகசோதி
(அதிபர் சேவை தரம் - I)

**யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை**

எமது பாடசாலையில் அதிபராக 11 வருடங்கள் உன்னதமான சேவையாற்றி இலங்கை **அதிபர் சேவை தரம்** I க்கு பதவி உயர்வு பெற்றதோடு :....

யா/ நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அதிபராக
இடமாற்றம் பெற்றுச் செல்லும் திருமதி ஸ்ரீரதி முருகசோதி
அவர்கள் மென்மேலும் பதவி உயர்வுகள் பெற்று உடல்
நலத்துடன் பல்லாண்டுகள் சீரும் சிறப்புடன் வாழ
இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
அச்சுவேலி.

வாழ்த்துவோர்
ஆசிரியர் கழகம்


# பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட தாதியைத் தாக்கி பிக்கு வெறியாட்டம்

கொழும்பு, ஜுலை 27

பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்ட தாதி ஒருவரைப் பௌத்த பிக்கு ஒருவர் கண்ணாடிப் பாத்திரம் மூலம் தாக்கியதால், தாதி படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம், ஆனமடுவ ஆதார மருத்துவமனையின் கொரோனா சிகிச்சைப் பிரிவில் நேற்று இடம்பெற்றது.

ஆனமடுவ குமாரகம விகாரையின் பிக்கு ஒருவர் காய்ச்சல் மற்றும் வேறு நோய்நிலைமை காரணமாக ஆனமடுவ ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். குறித்த தாதி பிக்குவுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டுள்ளார். இதன் போது ஏற்பட்ட வலி காரணமாக கோபமடைந்த அவர் கண்ணாடிப் பாத்திரம் ஒன்றால் தாதியைத் தாக்கியுள்ளார்.

தாக்குதலில் பலத்த காயமடைந்த தாதி சம்பவ இடத்திலேயே கீழே விழுந்துள்ளார்.

அவருக்கு அதே மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

பின்னர் படுகாயமடைந்த தாதி மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய பிக்கு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (து-22)

# உணவுப்பொதியில் மின் கடத்திக்கூடு

கிளிநொச்சி, ஜுலை 27

கிளிநொச்சி உணவகம் ஒன்றில் உணவுப் பொதியில் மின் கடத்திக்கூடு காணப்பட்டமை தொடர்பில் சுகாதார பரிசோதகர் ஊடாக நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் நேற்று பகல் இடம்பெற்றுள்ளது.

உணவுப் பொதியில் மின்கடத் திக்கூடு ஒன்று காணப்பட்டமை தொடர்பில் குறித்த பிரதேசத்துக் குப் பொறுப்பான சுகாதார பரிசோதகர் மற்றும் கரைச்சி பிரதேச சபையின ரின் கவனத்துக்கு நுகர்வோ ரால் கொண்டுசெல்லப்பட்டது.

அதனையடுத்து, உணவகத்தின் சுகாதார நிலைமைகள் தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர் பார்வையிட்டதோடு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-6)


**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

மண்ணில்
31 - 12 - 1937



விண்ணில்
27 - 06 - 2021

அமரர் **மருதபிள்ளை அரசமணி**

உன் உடல் மூலம் என் உடல் தந்த அன்னையே
உன் உதிரத்தை உணவாக தந்து
உயிருக்கு உணர்வு அளித்த அன்னையே
நாட்கள் முப்பத்தொன்று ஆனாலும்
எம்மை விட்டு என்றும் அகலாது உம் நினைவுகள்
பிறப்போடு இறப்பு இணைந்ததெனினும்
இழப்பினை நெஞ்சம் ஏற்பதில்லை அம்மா
என்றும் உங்கள் நினைவோடு...
ஓம் சாந்தி.! சாந்தி.!! சாந்தி.!!!

அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி மூலமாகவும் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும், எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 303, ஆடியபாதம் வீதி,
நாயன்மார்கட்டு நல்லூர்.

0777 29 8060
077 169 7331

குடும்பத்தினர்



**காவலாளி தேவை**

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்திற்கு இரவுக் காவலாளி தேவை.** சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப கட்டடத்தொகுதி 2 ஆம் மாடி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 05.08.2021 ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாக விண்ணப்பத்தை தயாரித்து விண்ணப்பிக்கவும்

021 222 2324

செயலாளர்,
யா.மா.கூ.சபை



**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**ஆண்டுப் பொதுக்கூட்டம் - 2021**

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 28.08.2021 அன்று முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 31.01.2021 இற்கு முன்னர் உறுப்புரிமை பெற்றோரும் தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே இக் கூட்டத்திற் கலந்துகொள்ள உரித்துடையவராவார்.

பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 09.08.2021 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

லோ. துஷிகரன்
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்டச்....

இத்தகைய நியமனம், ஜனநாயக விரோதமான செயலாகும் என்றும் இரா.சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். பெரும்பான்மை இனத்தவர் நியமிக்கப்படுவதைத் நிறுத்துமாறு கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

யாழ். மாவட்டத்துக்கு விரைவில் தமிழ் பேச முடியாத ஒருவர் மாவட்டச்செயலர் பதவிக்கு நியமிக்கப்பட இருக்கின்றார் என நான் அறிந்துகொண்டேன். நீங்கள் அறிந்திருக்கின்ற பிரகாரம், யாழ். மாவட்டத்தில் 95 வீதமானவர்கள் தமிழ் பேசும் சமூகத்தினராவர். மேலும், 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனைய நிர்வாகத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ் பேசும் சமூகத்தைச் சார்ந்தவர்களாவர்.

இந்தப் பின்னணியில் தமிழ் பேசத் தெரியாத ஓர் அரச உத்தியோகத்தரை /அரச அதிபராக யாழ். மாவட்டத்துக்கு நியமிப்பது பொருத்தமற்ற விடயமாகும். மேலும், இது ஜனநாயக விரோதமான செயலாகும்.

மாவட்டத்திலுள்ள உயர் பதவியில் இருக்கும் அரச உத்தியோகத்தர் தமிழ் பேசும் ஒருவராக இருக்கும் சந்தர்ப்பத்தில்தான் அவருடனான வாய்மூல மற்றும் எழுத்துமூல தொடர்பாடல்கள் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், தமிழ் மக்களின் வரலாற்று ரீதியான பூர்வீக இடங்களான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய அரசமைப்பின் ஊடாக அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்க அரசு முயற்சிகளை எடுக்கும் சந்தர்ப்பத்தில் இத்தகைய செயற்பாடுகள் எதிர்மறையான விளைவாகவும், மக்களால் வரவேற்கப்பட முடியாத ஒன்றாகவுமே காணப்படுகின்றது.

எனவே, அத்தகைய பிரேரணையை மீளாய்வுசெய்து, மேற்குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு யாழ். மாவட்டத்தின் அரச அதிபராக அனுபவமும் செயற்றிறனுமுள்ள தமிழ் பேசும் ஓர் அரச அதிகாரியை நியமிக்குமாறு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்" என்றுள்ளது.

வடக்கு மாகாண பிரதம செயலராக பெரும்பான்மையினத்தவர் நியமிக்கப்பட்டு கைதடியில் உள்ள அலுவலகத்தில் நேற்று கடமைகளை பொறுப்பேற்றுள்ள நிலையில், சம்பந்தன் இத்தகைய கடிதத்தை பிரதமருக்கு அனுப்பியுள்ளார். (த-22)

## 250 கிலோ...

அவர்களிடமிருந்து 6 சாக்குகளில் பொதியிடப்பட்ட சுமார் 250 கிலோகிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

வளலாயைச் சேர்ந்த 22, 30 மற்றும் 36 வயதுடைய மூவரையே கடற்படையினர் கைதுசெய்தனர். குறித்த மூவரும் விசாரணைகளின் பின்னர் சட்டநடவடிக்கைக்காக வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-26)

## புதுக்குடியிருப்பு...

அவர் இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவருடன் பணியாற்றியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இன்று அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு நகர் பகுதியை அண்மித்து இதுவரை பொதுமக்கள் 8 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-19)

## கொரோனாவால்...

களாக காய்ச்சல் உள்ளது என்று தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்ந்திருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்தநிலையில், நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, அவருடன் தொடர்பைப் பேணியவர்களுக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. இவர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் பொது சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளார்கள். (த-19)

## ஆசிரியர்களின்...

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

"ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் இன்று (நேற்று) மாலை 5 மணிக்கு நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் பத்திரமொன்றை முன்வைப்போம். அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னரே அது தொடர்பில் அறிவிக்கப்படும்.

நாளை (இன்று) காலை ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி, பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## அரச ஊழியர்கள்...

வைத்துக்கொண்டு நிறுவனத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது என்று அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சு தெரிவிக்கிறது.

எனவே, எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அரச ஊழியர்கள் அனைவரையும் வேலைக்கு அழைப்பதைச் சுகாதார அமைச்சகம் கவனத்தில் கொண்டு, அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

தற்போது பொது நிர்வாக ஊழியர்கள் சேவையின் தேவையைப் பொறுத்து வாரத்தில் இரண்டு நாள்கள் வேலைக்கு அழைக்கப்படுகிறார்கள் என பொது நிர்வாக அமைச்சகம் மேலும் தெரிவிக்கிறது. (த-இ)

## கூட்டு....

தொடர்பில் ஜனாதிபதிக்கு நேற்று நேரில் உறுதியளித்தது என அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விடுத்த வேண்டுகோளின் பிரகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது. சுமார் இரண்டரை மணித்தியாலங்கள் நடைபெற்ற இந்தச்சந்திப்பின்போது அரசியல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதேச அரசியல் வாதிகள், தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பில் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டிய சுதந்திரக்கட்சியினர், அதற்கான தீர்வு அவசியம் எனவும் கோரினர்.

தொழிற்சங்க பிரச்சினை, உரத்தட்டுப்பாடு மற்றும் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டம் தொடர்பிலும், புதிய அரசமைப்பு மற்றும் தேர்தல் முறை மாற்றம் சம்பந்தமாகவும் இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

"ஜனாதிபதியுடனான சந்திப்பு திருப்திகரமாக அமைந்தது. உரிய தீர்வு கிடைக்கும் என நம்புகின்றோம்" என்று சு.கவின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அத்துடன், "ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தி அரசால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உந்துசக்தியாக சுதந்திரக்கட்சி செயற்படும்" என்று சு.கவின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.

சு.கவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபாலடி சில்வா, பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர, தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட சு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச் சந்திப்பில் பங்கேற்றனர்.

அரசிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியேற வேண்டும் என அந்தக்கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் சிலர் அண்மையில் வலியுறுத்தியிருந்தனர்.

அதுமட்டுமன்றி, அரசின் செயற்பாடுகள் தொடர்பில் சு.கவின். தயாசிறி ஜயசேகர சில வாரங்களாக கடும் அதிருப்திகளை வெளியிட்டுவந்தார்.

அது வளர்ந்து சு.க. அணிக்கும் பெரமுன அணிக்கும் இடையில் பெரும் சொற்போராக மூண்டிருந்தது.

அரசிலிருந்து விலகத்தயார் என்றவாறெல்லாம் வாய்ச்சவடால்விட்ட தயாசிறி ஜயசேசர அணியினர், அவை எல்லாவற்றையும் தூக்கிக் கடாசிவிட்டு ஜனாதிபதியை நேற்றுச் சந்தித்து ஒன்றாகப் பயணிப்போம் என்று சத்தியம் செய்து திரும்பியுள்ளனர். (த-44)

## வல்வெட்டித்துறையில்..

அன்டிஜென் பரிசோதனையிலேயே 16 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. வல்வெட்டித்துறை வடமேற்கு (ஜே/388) கிராம அலுவலர் பிரிவே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளது. அந்தக் கிராமத்தில் 310 குடும்பங்களைச் சேர்ந்த 940 பேர் வசிக்கின்றனர். (த-26, 20)

## கரவெட்டி....

கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 49 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கோவில் திருவிழாவில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என அறியப்பட்ட நிலையில் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் மேற்கொண்ட நடவடிக்கையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனையடுத்து, கரவெட்டி தெற்கு கிராமத்தை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். (த-26)

## மஹிந்தவின்...

என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் சில அபிவிருத்தித் திட்டங்களை ஆராய குறிப்பாக, 100 நகரங்களை அழகுபடுத்தும் திட்ட ஆரம்பம், தாழையடி மற்றும் நயினாதீவு பகுதிகளில் கடல்நீரை நன்னீராக்கும் செயற்றிட்ட திறப்பு நிகழ்வு என்பன உள்ளிட்ட நிகழ்வுகளில் பங்கேற்க அவர் வருகைதரவிருந்தார்.

எனினும், தவிர்க்கமுடியாத காரணத்தால், அவருடைய பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-த)

## வைரவர்...

ரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பிராந்திய போதைத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய வவுனியா நெளுக்குளம் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த வேளை, முச்சக்கரவண்டி ஒன்றை வழிமறித்து சோதனையிட்டபோதே, பழமையும் பெறுமயும் வாய்ந்த குறித்த வைரவர் சிலை மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-110)

---

# உடுப்பிட்டியில் தாக்குதல் நடத்திய மற்றொருவரும் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 27

உடுப்பிட்டி நாலவலடியில் அண்மையில் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் மேலும் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஏனைய நான்கு பேர் தலைமறைவாகியுள்ளநிலையில் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

உடுப்பிட்டி நாவலடியில், கடந்த 20 ஆம் திகதி இரவு வீதியில் கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது, அங்கு மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த கும்பல் ஒன்று தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றிருந்தது.

சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸாரால் தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த ஒருவர் கடந்தவாரம் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்தநிலையில், மற்றைய சந்தேகநபர் நேற்று கைதுசெய்யப்பட்டார். 24 வயதுடைய அவர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரிடமிருந்து வாள் ஒன்று மீட்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் 19இல் ஐ.பி.எல். ஆரம்பம்



**சென்னை, ஜூலை 27**

**இந்தியாவில் இந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஐ.பி.எல். தொடர் கொரோனாத் தொற்றுக் காரணமாக கைவிடப்பட்ட நிலையில், தொடரின் எஞ்சிய ஆட்டங்களை செப்ரெம்பர் மாதம் நடத்த இந்திய கிரிக்கெட் சபை திட்டமிட்டு தொடரின் அட்டவணையையும் அறிவித்துள்ளது.**

இதன்படி, செப்ரெம்பம் மாதம் 19ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிவரை எஞ்சிய போட்டிகள் நடைபெறவுள்ளன. மீண்டும் தொடங்கும் இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் ரோகித் சர்மா தலைமையிலான நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணி, டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸை டுபாயில் எதிர்கொள்கிறது. மறுநாள் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி, கொல்கத்தா நைட் ரைடர்ஸுடன் அபுதாபியில் மோதுகிறது. இறுதிப்போட்டி டுபாயில் அரங்கேறுகிறது.

இந்திய நேரப்படி தினமும் இரவு 7.30 மணிக்கு போட்டி தொடங்கும். ஒரே நாளில் 2 போட்டிகள் இருக்கும்போது முதல் ஆட்டம் மாலை 3.30 மணிக்கு தொடங்கி நடக்கும். மொத்தம் 7 நாள்கள் இரட்டை ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

துபாயில் 13 ஆட்டங்களும், சார்ஜாவில் 10 ஆட்டங்களும், அபுதாபியில் 8 ஆட்டங்களும் நடக்கின்றன.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் தற்போது புள்ளி பட்டியலில் டெல்லி 12 புள்ளிகளுடன் முதலிடத்திலும் (6 வெற்றி, 2 தோல்வி), சென்னை சூப்பர் கிங்ஸ் 10 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் (5 வெற்றி, 2 தோல்வி), பெங்களூர் அணி 10 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் (5 வெற்றி, 2 தோல்வி) மும்பை இந்தியன்ஸ் 8 புள்ளிகளு டன் 4ஆவது இடத்திலும் (4 வெற்றி, 3 தோல்வி) உள்ளன. (ம)



# டெஸ்ட் அணிக்குள் சூரியக்குமார் யாதவ்

லண்டன், ஜூலை 27

இங்கிலாந்துக்கு எதிரான இந்திய டெஸ்ட் அணியிலும் சூரியக்குமார் யாதவுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. பிருத்வி ஷாவும் அணிக்குள் இணைக்கப்பட்டுள்ளார். இதன்படி அவர்கள் இருவரும் இலங்கையில் இருந்து இங்கிலாந்துக்குப் பயணப்படவுள்ளனர்.

இந்திய அணி தவான் தலைமையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இந்தத் தொடரில் சூரியக்குமார் யாதவ் மற்றும் பிருத்வி ஷா இருவரும் சிறப்பாக விளையாடி வருகின்றனர். அதேநேரம் கோலி தலைமையில் இந்திய முதன்மை அணி இங்கிலாந்தில் தங்கியுள்ளது. இவர்கள் இங்கிலாந்தை எதிர்த்து 5 ஆட்டங்கள் கொண்ட நீண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளனர். இந்தத் தொடரில் இடம்பிடித்திருந்த ஆரம்ப வீரர் கில் மற்றும் சுழற்பந்துவீச்சாளர் சுந்தர் இருவரும் காயமடைந்துள்ள நிலையில் அவர்களுக்குப் பதிலாக யாரை அணிக்குள் எடுப்பது என்பது தொடர்பில் இந்திய கிரிக்கெட் சபையின் தெரிவுக்குழு அறிவித்துள்ளது. இதன்படி சூரியகுமார் யாதேவ் மற்றும் பிருத்வி ஷா இருவரும் அணிக்குள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கொழும்பில் 'பயோ பபுள்' வளையத்துக்குள் இருப்பதால் 'பயோ பபுள்' முறையில் இங்கிலாந்துக்குச் செல்லவுள்ளனர். அங்கு இவர்கள் தம்மைத் தனிமைப்படுத்தத் தேவையில்லை. சாதாரண பி.சி.ஆர். சோதனையை மேற்கொண்டாலே போதுமானது. (ம)



# ஒலிம்பிக் பதக்கம் அமெ. முதலிடம்!

டோக்கியோ, ஜூலை 27

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வரும் நிலையில், நேற்று இரவு வரையான நிலவரத்தின் அடிப்படையில் புள்ளிப்பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் இருந்தது.

7 தங்கம், 3 வெள்ளி, 4 வெண்கலம் என 14 பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடத்திலும், 7 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் என 11 பதக்கங்களுடன் ஜப்பான் இரண்டாவது இடத்திலும், 6 தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலம் என 15 பதக்கங்களுடன் சீனா மூன்றாவது இடத்திலும் உள்ளன. (ம)

# பானுக ராஜபக்ச காயத்தால் விலகல்



கொழும்பு, ஜூலை 27

இந்தியாவுக்கு எதிராக இன்று நடைபெறும் இரண்டாவது ரி20 ஆட்டத்தில் இருந்து விலகினார் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் பானுக ராஜபக்ச.

கைவிரலில் ஏற்பட்ட காயத்தை அடுத்தே அவர் விலகியுள்ளார். மூன்றாவது ரி20 ஆட்டத்திலும் அவர் களமிறங்குவது சந்தேகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இந்தியா - இலங்கை 2ஆவது ரி20 இன்று!

கொழும்பு, ஜூலை 27

இந்தியா இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று இரவு நடைபெறவுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி அபார வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்று வெற்றிபெற்றே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் இலங்கை அணி களமிறங்குகின்றது. இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றால், தொடர் இந்தியாவிடம் சென்றுவிடும். முன்னதாக நடைபெற்ற ஒருநாள் தொடரையும் இந்திய அணி 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)



நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
65 நாள்களான ஒரிஜினல் ஜேர்மன் சர்ப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
• இடம்: கிளிநொச்சி
தேவைப்படுவோர் மட்டும் தொடர்புகொள்ளவும்
077 190 3165

இறைச்சிக் கோழி விற்பனை
புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்தும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
U.SA பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

உடனடி வேலைவாய்ப்பு
அரச அங்கீகாரம் பெற்ற PVT (LTD) Companyயில் பல வகையான Job.
முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் பல வேலைகள் உள்ளன.
முந்தும் 18 பேருக்கு முன்னுரிமை.
உடன் தொடர்பு:
jobsbank 04 @gmail.com
077 03 18 126



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.